# நேச நதிக்கரையில்

1

வெள்ளியைக் கரைத்து விட்டதுபோல ஓடிக் கொண்டிருந்தது நதி.

சுற்றிலும் விண்ணை முட்டித் தாங்குவது போல நின்ற வெள்ளிப் பனிமலையின் தேவதைகள் உறைந்த பனியை கரைத்து விட்டிருக்க வேணும்...

அதுதான் இப்படி மினுங்கலாய், துள்ளலாய் ஓடி வருகிறது பியாஸ். நம்மூர் போல சன்ன மணலில் தவழ்ந்து வரவில்லை இந்த வடஇந்திய நதி.

முரட்டு வெண் பாறைகளில் அநாயசியமாய் தத்தித் தாவும் குதூகலம்! சலங்கைக் கட்டி ஓடி வரும் பெண்கள் கூட்டம் போல ஒரு இன்னொலி.

கரை புரண்டு பாயும் கம்பீரம்.

யாரும் அதில் இறங்கிக் குளிக்கத் துணியாததாலோ என்னவோ வெகு சுத்தம் - பளிங்கின் தூய்மை!

ஸிம்லா வரைக்கும் துணைக்கு வந்த தெரிந்தவர்கள் அங்கு பிரிந்து விட, பவித்ரா சற்று தயக்கத்துடன் தான் பயணத்தைத் தொடர்ந்திருந்தாள்.

'நம்மூர் பஸ்களின் வேகம், வீரம் எல்லாம் இங்கில்லை யம்மா - நிதானமாகவேப் போகும் - தவிர இது ஹிமாச்சல அரசின் பயணிகள் பஸ். போற வழி எங்கும் இயற்கை பிரமாதப் படுத்துவா - ரசித்தபடியே போனால் மணாலியில் உன் தோழி உன்னை வரவேற்கக் காத்திருப்பா -

பிறகென்ன?'

என்று தைரியம் சொல்லி விடை பெற்றிருந்தார் ராமண்ணா. ஸிம்லாவிலிருந்து மணாலி போகும் முழுக்க மலைப் பாதை என்பதால் தலைச் சுற்றலைத் தவிர்க்க மாத்திரை போட்டிருந்தாள். பஸ் புறப்பட்டதுமே கண்ணைச் செருக, சால்வைக்குள் முடங்கிக் கண் அயர்ந்தாள்.

இரண்டு மணி நேரத்தில் புத்துணர்வோடு கண் திறந்தவ ளின் விழிகள் அகன்றன... அப்புதுத் தோழியைக் கண்டு!

சாலையை ஒட்டி குதித்து குதூகலமாய் ஓடி வந்து கொண்டிருந்தாள் பியாஸ்!

ஏதோ இவளைப் பாதி வழியிலேயே வரவேற்று வீடு கூட்டிப் போகவே வந்தது போன்ற உற்சாக உபசாரம்!

ஆர்வமாய் பியாஸை ரசித்தபடி பிரயாணித்ததில் அலுப்பே தோன்றவில்லை. அதிலும் குலுவைத் தாண்டி மணாலியை அடையும் வரை சுற்றிலும் வேலி போல பனித் தொப்பியுட னான பிரம்மாண்ட மலைத் தொடர்கள் வேறு.

தேநீர் குடிக்க இறங்க, நதியின் சிணுங்கல் அழகாய் கேட்டது.

நதியைப் பெண்ணிற்கு ஒப்பிடுவது காரணமாய்த்தான்! முரட்டுப் பாறைகளால் ஆன தடம், நதி தொட்டதும் மாயமாய் ரம்மியமாகி விட்டது... உலகின் தாகம் தணித்து, செழிப்பு



தந்து, கண்களை குளிர்விக்கும் இந்த அற்புதத்தை பெண்ணுடன்தானே ஒப்பிட வேணும்? இயற்கை அன்னை எனும் பதம் மகாப் பொருத்தம்...

''அதோ அங்கேப் பாருங்க - முகடெல்லாம் எப்படி மினுங்கறது?''

ஒரு சக பயணி தன் கணவனிடம் சுட்டிக் காட்ட இவளும் திரும்பினாள்.

''அது பனிடீ!''

''ஹைய்யோ... வெள்ளியாட்டமில்ல மின்றது? கொள்ளை அழகுல்ல?'' புதிதாய் பார்க்கும் எவரையும் பரவசப்படுத்தும் அதிசய அழகுதான்!

இதோ மணாலி வந்து பத்து நாட்களாகியும் அலுத்தேப் போகாத அற்புத அழகு!

எழுந்தவள் அருகிருந்த ஆப்பிள் மரத்தில் ஒரு தங்க நிறக் கனியைப் பறித்தாள். பறிப்பவர்க்கு கைவாய் இருக்கட்டும் என்பதாய் தணிந்த மரம்.

முதல் முறை ஆப்பிள் மரத்தைக் கண்ட குஷியில் பறித்துக் கடித்ததும் சாறு வெடித்துச் சிதறி உடையெங்கும் வடிந்து விட்டது. இப்போது சற்று அண்ணாந்து கடித்து சாற்றை உள்ளிறக்கும் கலை கைவந்து விட்டது. ரசித்து சுவைத்தவள் குனிந்து நதியில் கைகளைக் கழுவி·பிசுபிசுத்த உதடுகளையும் சுவைத்தாள்.

பனி உருகி உருவான நதியல்லவா...

குளிர் எலும்பு வரை ஊடுருவியது...! முந்தானையில் கையின் ஈரத்தைத் துடைத்தபடி கரையேறியவள் புல்சரிவில் படுத்தாள்...

காற்று இவளது மேலாடையை இழுத்துக் குலைத்தது.

எழுந்து இழுத்துப் போர்த்தி, சற்று ஒருக்களித்து படுத்தாள்... யாருமில்லாத தனியிடம்தான் எனினும் கூசத்தான் செய்கிறது.

யப்பா... எத்தனை அவமானங்களைப் பார்த்தாகி விட்டது? 21 வயதிற்குள் எத்தனை பெண்கள் இப்படி எல்லாம் அனுபவித்திருப்பார்கள்? வேண்டாம்... யாருக்கும் இதுபோன்ற அவலங்கள் வேண்டாம்.

பவித்ரா தன் எட்டாவது வயதிலேயே தாயை இழந்தவள். அப்பா மந்திரமூர்த்திக்கு நகரிலேயே பெரிய வாகன உதிரிப் பாகங்களுக்கான கடை உண்டு.

சிறு வயதில் இவள் கடையில் போய் உட்கார்ந்திருக்க, ஒரு திருவிழாவின் மும்முரத்தில் வியாபாரம் நடக்கும்.

ஒரு சமஸ்தான இளவரசியின் தோரணையுடன் அமர்ந்திருப்பவளை அநேகர் வந்து,

'அடடே, இதான் மூர்த்தி சார் மகளா? பேரென்னம்மா?' என்று கன்னம் தட்டி விசாரித்துதான் போவார்கள்.

பதினோராம் வயதில் அப்பா இவளை குன்னூர் கான்வென்ட்டில் சேர்த்த போது பவித்ராவிற்கு எல்லாம் புதிதாய் இருந்தாலும் விரைவிலேயே அப்புது உலகமும் பழகி, பிடித்தும் போனது. கனிவான கன்னியாஸ்திரிகள், சம வயதும் அந்தஸ்தோடும் கூடிய பல தோழிகள், இசை, விளையாட்டிலும் தேர்ந்த பயிற்சி - சதா 'படி - படிச்சியா?' என்று யாரும் பிய்த்துப் பிடுங்காத சூழல் - எல்லாமே பிடித்துதான் இருந்தது.

அப்பா சிஸ்டரிடம் மகளை ஒப்படைத்த போது -



'இவ எந்நேரமும் பெரிய மனுஷியாயிடுவான்னு பயமாய் இருக்குதும்மா - தாயில்லாப் பொண்ணு. என் கடை சிப்பந்திகள், ஏன் வாங்கி வருபவர்கள் எல்லோரும் ஆண் பிள்ளைகள். வீட்டு சமையல்காரன் கூடத்தான். பெண்ணை வேலைக்கு அமர்த்தினால் என் பேர் உருளுமோன்ர பயம்!

இனி பவித்ரா உங்க பொறுப்புங்க சிஸ்டர். இவளுக்கும் அழுகையாய் வந்தாலும் தான் இங்கிருப்பது தனக்கும் பாதுகாப்பு, அப்பாவிற்கும் நிம்மதி என்றளவில் புரிந்தது.

மறுவருடமே பவித்ரா பெரியவளும் ஆனாள். அப்போது சிஸ்டரே தேர்ந்தெடுத்து இவர்களது வீட்டு வேலைக்கென அமைத்துக் கொடுத்த பெண்தான் - ஜீவனம்மா. இவள் அதைச் செல்லமாய் சுருக்கி 'ஜீ' என்றாக்கினாள்.

'வீட்டில் ஒரு பெண் அவசியம் மிஸ்டர் மந்திரமூர்த்தி. நான்கு வேலையாட்கள் இருந்தும் உங்க வீட்டு மேஜைகளில் தூசு படிஞ்சிருக்குது. உங்க வீட்டிற்கு வந்த சமயம் கவனித்தேன் - ஒரு மூட்டைக் காரட்னு வாங்கிப் போட்டு, தொடர்ச்சியாய் நாலு நாட்களுக்கு அதையே சமைக்கறாங் களாம் - மற்றதெல்லாம் எங்கே போறதுங்கறதுக்குக் கணக்கில்லை. ரெண்டே பேருள்ள உங்க குடும்பத்திற்கு எத்தனை லிட்டர் பால் வாங்கறீங்க தெரியுமா?''

அவர் பரிதாபமாய் தலையசைத்தார்.

''நாலு லிட்டர்! வேலைக்காரங்க ரெண்டு வேளை காபி குடிக்கறதில் தப்பில்லை - ஆனால் தங்களின் வீட்டிற்கும் சேர்த்து உங்க பணத்தில் வாங்கிப் போடறது தப்பு - அது உங்களைப் பாதிக்கும்...''

''உண்மைதான் சிஸ்டர்... எனக்கும் பணம் கொடுத்து மாளலை. சதா அரிசி, சர்க்கரை, கறி, கோழின்னு வாங்கித் தீரலை...''

பெருமூச்சுடன் ஒத்துக் கொண்டார். 'நாணயமாய் ஒரு பெண்ணின் நிர்வாகத்தில் உங்க வீடும் சீராய் நடக்கும். தவிர பவித்ரா வீட்டிற்கு வந்து இருக்கும் போது ஒரு பெண் துணையும் நல்லது...'

"சரிதான் சிஸ்டர்... ஆனால்..."

மூர்த்தி சற்று சங்கடமாய் குனிந்தார்.

"உங்க பேர் ஊர் வாயில் உருளக்கூடாதுன்னு நினைக் கறீங்க. ஜீவனம்மாவிற்கு வயசு நாற்பதுக்கு மேலே. பார்க்கறதுக்கு வெகு சுமார். தவிர நேர்மையும் ஒழுக்கமானவள் - சமையலிலும் கெட்டி."

அப்படி ஜீவனம்மா வீட்டிற்கு வர, வீட்டிற்கு ஜீவனும் களையுமாய் சேர்ந்தது!

தோட்ட வேலைக்கு, வீட்டு பராமரிப்புக்கு என்று இருவர் மட்டுமே வேலைக்குப் போதுமென்று அவள் வேலையில் இறங்க, எண்ணெயிட்ட சக்கரமாய் சுழல ஆரம்பித்தது வீடு.

## 2

பழைய சிந்தனைகளில் லயித்திருந்தவளுக்கு நேரம் போனதே தெரியவில்லை.

இருட்டியது உணர்ந்து நதிக்கரையிலிருந்து எழுந்து வீடு நோக்கி நடக்கலானாள் - இந்தப் பத்து நாட்களில் இதுவும் வீடு போலாகிப் போனது... சிநேகிதி கமலி மட்டும் இல்லையெனில்...

அவளையும் மீறி சிலிர்த்தது.



ஆனால் கடவுள் அப்படி யாரையும் நிர்கதியாய் விட்டு விடுவதில்லை. அப்படியானால் தன் தந்தையின் வாழ்வு ஏன் அப்படியானது?

'அப்பா நானும் உங்களோடு கடைக்கு வரேனே?'

விடுமுறைக்கு வரும் மகள் ஆவலாய் கேட்டாலும் மூர்த்தி தட்டிக் கழித்து விடுவார்.

'எதுக்குடா? வேலைக்கு இருக்கறதும், வாங்க வர்றதுமே ஆம்பளைங்க அங்கே நீ எதுக்கு?'

இப்படி ஒரு காரணத்தை அப்பா சொன்னதால், இவளும் கூச்சத்துடன் வீட்டிலேயே இருந்து விடுவாள். ஒரு நாள் அப்பா, கடையின் ஸ்டோர் சாவியை மறந்து போய் விட்டு, போன கையோடு காரை ஒரு டிரைவரிடம் தந்து அனுப்பினார்.

பொழுது போகாமல் இருந்த பவித்ரா அந்தக் காரில் சாவியுடன் கிளம்பினாள்... அப்பாவிடம் சாவியைத் தந்து உடனே திரும்பிவிடலாம் என்று போனவளுக்கு தங்களது கடையையே அடையாளம் தெரியவில்லை!

நகரில் 'ஜே ஜே' என்று நின்ற கடை எங்கே? பெட்டிக்கடை போல ஒடுங்கிக் கிடப்பதா 'மூர்த்தி ஸ்டோர்ஸ்?' இவர்கள் கடையில் பெரும்பகுதி, துணிக்கடையாகி, 'ரஹ்மான் ஆடையகம்' என்ற வர்ண பலகையோடு இருந்தது!

"இது யார் கடை, டிரைவர்?"

"வாடகைக்கு விட்டிருக்காங்கப் போல..."

"எவ்வளவு நாட்களாய்?"

"அதாச்சு மூணு, நாலு வருஷம்."

"ம்ம்... சாவியைக் கொடுத்துட்டு வாங்க. அப்பாட்ட நான் வந்ததைச் சொல்ல வேண்டாம்..."

வீட்டில் அப்பாவின் தலையில் மிளகாய் அரைத்தது போலவே கம்பெனியிலும் ஏமாற்றுக்கள் நடந்திருக்க வேண்டும். அப்பா தொழிலில் நொடித்திருந்தார் என்பதை விட, அதை அவர் தன்னிடம் சொல்லாதது அவளை அதிகம் வதைத்தது! சிறு பெண்ணிடம் என்னத்தைச் சொல்ல என்ற ஆதங்கமா? ஆனால் தன்னை விட்டால் அவருக்கு வேறு யாருண்டு?

அன்று மாலை வீடு திரும்பிய தந்தை, மகள் வழக்கமான உற்சாகத்துடன் பேசாதது புரிந்து வினவினார் -

"ஏன்டா, உடம்பு சரியில்லையா?"

அடக்கமாட்டாமல் அவர் தோளில் சாய்ந்து விக்கி அழுதாள்.

"மனசு... தாங்கலை... ஏம்பா?"

"என்னடா?"

"ஏன் என்னிடம் எதையும் சொல்லலை?"

சற்று நேர மௌனத்திற்குப் பிறகு கேட்டார் -

"யார் என்ன சொன்னாங்க?"

"நானே பார்த்தாச்சு. சாவியைக் கொடுக்கலாம்னு வந்தேன் - என்னாச்சப்பா?"

"ஒண்டியாய் சமாளிக்க எனக்கு சாமர்த்தியமில்லைடா... உங்கம்மா இருந்தவரை வீட்டு பிரச்னை என்னை எட்டாது. அவ அப்பா என் தொழிலை நிமிர்த்த உதவினார். எதுவானாலும் அவகிட்ட மனசு விட்டு பேசலாம்... அவளும், மாமாவும் போன பிறகு அகலக் கால் வச்சு அமுங்கிட்டேன்."

"போகட்டும் விடுங்கப்பா... எப்படிப் போச்சோ அப்படி வரவும் செய்யும்..." - தோரணையாய் ஆறுதல் சொன்னாள்.



ஆனால் தொடர்ந்த வருடங்களில் அடுத்த அதிர்ச்சி... அப்பா குடிக்கிறார் என்ற அதிர்ச்சி!

"ரெண்டு கப் காபிக்கு மேல் குடிச்சால் உடம்பு பாழா யிடும்" என்று பிறருக்கு புத்தி சொல்பவரா விஸ்கியும் பிராந்தியுமாய் குடிக்கிறார்? வழக்கமாய் கீழே ஹாலில் இவளோடு வெகு நேரம் பேசும் அப்பா வீடு வந்ததுமே சாப்பிட்டதாய் பேர் பண்ணிவிட்டு மாடியில் உள்ள தனியறைக்குப் போய் விடுவது முதலில் தப்பாய் படவில்லை.

பாவம் வேலையின் அலுப்பு என்று தப்பாய் கணித்து விட்டாள். இவளும் ஜீயுமாய் ஏதேனும் படம் பார்ப்பது, பூ வேலை செய்வது என்றிருப்பார்கள்.

அன்று ஒரு நாள் அப்பாவின் சிநேகிதரின் போன் அழைப்பு வர, இவள் கார்ட்லெஸ் 'பேசி'யுடன் மாடிக்குப் போய் கதவைத் தள்ள, கையில் கோப்பையுடனும் கண்ணில் கிறக்கத்துடனும் இருந்தவர் திகைத்து விட்டார்.

"என்ன?" எங்கோ பார்த்தபடி கேட்டார்...

"மாணிக்க மாமா போன்ல கூப்பிட்டாங்க... அதான்..."

"காலையில் பேசிக்கறேன்ம்மா."

ஆனால் பெங்களூர் கல்லூரியில் சேரும் முன்பாக அப்பாவிடம் தனியே உட்கார்ந்து பேசினாள் -

"ஏன்ப்பா... எத்தனை நாளாய் இந்தப் பழக்கம்?"

எதும்மா என்று அசட்டுக் கேள்வி கேட்காமல் சுவரை வெறித்தார் - "வேண்டாம்ப்பா... தொழிலில் ஏற்ற இறக்கம் வரலாம்... ஆனா ஒழுக்கத்தில் தடுமாறக் கூடாதில்லையா?"

சிஸ்டர் கற்றுத் தந்த நல்லவற்றைத் தந்தையுடன் பகிர்ந்தாள். ஆனால் அதெல்லாம் எட்டாத தூரத்திற்கு அவரை 'குடி' கூட்டிப் போயிருந்தது.

"குறைச்சுக்கறேம்மா" என்று மட்டுமே சொன்னார்.

விருதுநகரில் கல்லூரிகள் இல்லாமல் இல்லை. அப்பா வுடன் இருந்தபடியே கல்லூரிப் படிப்பைத் தொடர நினைத் தவளை மோகன் தான் தடுத்தான்.

"சிறந்த பள்ளியில் படிச்ச நீ ஸிட்டி காலெஜ்ல படிக்கணும் பவி. அங்குதான் உனக்கேற்றது போல சிநேகிதம் அமையும்."

"இல்லை மோகன்... அப்பாவோடு இருக்கணும்னு நினைக்கறேன் - அவர் பாவம் தனியாய்..."

"ஏன் அப்பாவை நான் பார்த்துக்க மாட்டேன்?"

ஆதங்கத்துடன் குறைபட்டான்.

நினைவு தெரிந்த நாளாய் மோகன் இவர்களது குடும்ப நண்பன். அவனது அப்பாவும் மந்திரமூர்த்தியும் நண்பர்கள் என்ற ஆரம்பித்த பழக்கம், மிக நெருங்கிவிட்டது. அதுவும் மோகன் தன் தகப்பனை இழந்த பிறகு இவர்கள் வீட்டையே தஞ்சமாக்கிக் கொண்டான். மகனில்லாத மந்திரமூர்த்திக்கு அவனது அண்மை பெரும் ஆறுதல், சதா மூர்த்தியோடு பேசியபடி இருப்பான். வங்கிக்குப் போவது, ஏன் பள்ளியில் பவித்ராவிற்கான ஃபீஸ் கட்டுவதிலிருந்து அவளை விடுமுறை சமயங்களில் போய் அழைத்து வருவதும் அவன்தான். தன் தாயுடன் அவனுக்கு எப்போதுமே ஒட்டுதல் இல்லை யென்றும், அவர்களுக்கு தன் பெண்களே உசத்தி என்ற குறையைக் கூட இயல்பாய் பகிர்ந்து கொள்வான்...

"உங்க வீடு மட்டும் இல்லைன்னா நான் அநாதை போல உணர்ந்திருப்பேன் பவி" என்றவன் சொல்ல இவள் உருகுவாள்.

ஆனால் ஜீக்கு மோகனை அத்தனை பிடிக்காது.



வார்த்தைகளில் அப்படி அவள் சொன்னதில்லை... ஆனால் அவனைக் கண்டதும் முகம் சிறுத்து விடும்.

அப்பா இறந்த பிறகுதான் ஜீக்குத் தன்னைப் பிடிக்காத தற்கான காரணத்தைச் சொன்னான் மோகன்...

கேட்டவள் நிலைகுலைந்து போனாள்...!

## 3

ரஜாயினுள் பொதிந்து உறங்கிய தன் கணவனைப் புன்னகையுடன் பார்த்து நின்றாள் கமலி. கொண்டு வந்த காபி பிளாஸ்கை வைத்து விட்டு மெள்ள அவனது போர்வையை விலக்க.

"ம்ம்..."சுகமாய் முனங்கினான் சந்தோஷ்.

"மணி ஏழாச்சு."

"இன்னும் பத்து நிமிஷம்."

"பவித்ரா வந்த பிறகு நீங்க சோம்பேறி ஆயிட்டீங்க... பத்து நிமிஷத்துல இந்த காபியைக் குடிச்சுட்டு கிச்சனுக்கு வாங்க ஸர்."

"சரி - அப்ப அதைக் கொடு."

அவன் கேட்பது என்னவென்று தெரிந்தும் பிளாஸ்கை எடுத்து நீட்டினாள். "ச்சே... முட்டாள் பொம்பளைப்பா... எந்தலையில் கட்டிட்டாங்க..."

"யாரையும் குற்றம் சுமத்த முடியாது ஸர்... நீங்கதான் என்னைத் துரத்தி துரத்தி பிடிச்சீங்க!"

''ம்ப்ச்... பார்க்க சுமார்ருங்கறதில் ஏமாந்துட்டேன்.''

''எனக்கென்ன குறை. வயத்துல நாலு மாசப் பிள்ளையோட உங்களை இப்படி ஆசையாய் கவனிக்கறதுதான் குறை- இல்லை?''

''காலலை புருஷனை எப்படி அருமையாய் எழுப் பணுங்கறது தெரியலையே...''

''நாளைக்கு அடுப்பில் கரண்டியைப் போட்டு எடுத்துட்டு வரேன்.''

''சோம்பேறி! உதட்டை இப்படி எங்கன்னத்துல இங்கேயும் அங்கேயுமாய் லேசாய் ஒற்றி எடுக்கவுமா சோம்பல்?''

போர்வைக்குள்ளிருந்தபடியே அலுத்தான்.

''உங்களோடு சேர்ந்துதான் இப்படியாயிட்டேன்.'' சற்றே மேடிட்ட மனைவியின் வயிற்றை ஓரக்கண்ணால் பார்த்தவன்,

''அதான் எல்லாருக்கும் தெரியுமே'' - நக்கலடித்தான். இதற்குமேல் கட்டியவனுடன் வார்த்தை சரசமாட நேரமில்லை என்பது புரிய, அவசரமாய் அவனது நெற்றியில் முத்தமிட்டவள் வெளியேறினாள்.

சமையலறையில் முட்டை வறுபடும் மணம் அவளுக்குப் பசியைத் தூண்டினாலும் சற்றே குமட்டியது.

''வா கமலி - சாப்பிட்டியா?''

''பசிக்குது பவி - ஆனா குமட்டவும் செய்யுதே...''

''முதல்ல இந்த ஜூஸைக் குடி.''

சிறிது எலுமிச்சை சாறு கலந்து மாதுளம் பழரசத்தை ரசித்துப் பருகினாள்.



''உனக்கு எப்படி நன்றி சொல்லணும்னே தெரியலை பவி...''

''பத்து நாளாய் இதையே சொல்றே... இன்னுமா தெரியலை?''

''தெரியலைதான். காதல் கல்யாணம்னாலே ஏன் பெற்றவங்க ஒதுங்கிடறாங்கன்னு தெரியலை. நமக்கும் காதலிக்கும் போது மற்ற எல்லா உறவுகளும் மங்கி மறைஞ்சிடுது... இப்படி உண்டாயிருக்கும்போது பிறந்த வீட்டு உறவும் வேணுங்கற ஏக்கம் வருது... நீயும் இல்லைன்னா தவிச்சிருப்பேன் பவி...''

''நீ ஒரு நாளுக்கு பத்து முறை நன்றி சொன்னால், நான் தினம் இருபது தரம் சொல்லணுமே? அப்பா இறந்தது. அதன்பிறகு கடன்காரங்க பிடுங்கினதுன்னு நான் அயர்ந்த நேரம் இந்த அழகு மணாளிக்கு வந்ததும், உன் பிரியமும் தான் என்னை நிமிர்த்தினது...''

''அப்ப சேர்ந்து கடவுளுக்குத் தான் நாம் நன்றி சொல்லணும். ஒரு பொங்கலுக்கு உன் வீட்டுக்கு வந்தப்போதான் நாம ரொம்ப நெருங்கிட்டோம் - இல்லை?''

''நீ சீனியராய் இருந்தாலும் என்னிடம் ரொம்பப் பிரியமாய் இருந்தே கூடைப் பந்து டீமில் நாம் இருவருமே இருந்ததால் நிறைய ஊர்களுக்கும் சேர்ந்து போனோம்...''

''என் கல்யாணத்திற்கு வந்த ஒரே தோழி நீதானே?''

தேங்காய் துருவிய பவித்ரா சிரித்தாள் -

''வேறு யாரிடமும் விஷயத்தைச் சொல்லலையே நீ?''

''இவருக்கு பயம். விஷயம் வெளியில் தெரிஞ்சா கல்யாணம் நடக்காதுன்னு உம்மேல் அத்தனை நம்பிக்கை. மோகனைத் தவிர வேற யாரிடமும் அதிகம் நீ பேசிப் பார்த்ததில்லை நான். உன்னை ஊருக்குக் கூட்டிப் போறதும் அவர்தானே?''

அப்பா இறந்ததும் கூட அவன்தான் வந்தான் -

'அப்பாவுக்கு ரொம்ப முடியலை பவி- கிளம்பு' என்று பரிவாக விருதுநகருக்கு அழைத்து வந்தவன் இறந்தவரின் இறுதிக் காரியங்களை எல்லாம் குறைவின்றியும் செய்தான்.

மந்திரமூர்த்தியின் சாவு இயற்கையானதா... தற்கொலை என்று போலீஸ் விசாரணையில் இறங்க, பெரிய இடங்களுக்குப் போய் சொல்லி விவகாரம் ஆக்காமல் முடினான்.

ஆனால் ஊர் வாயை மூடக் கூடுமா?

அது இஷ்டத்திற்குப் பேசியது

திரித்துக் கதை கட்டியது

கூட்டியும் குறைத்தும் சிரித்தது!

அந்த அவமானங்களிலும் துணை நின்றவன்.

பவித்ராவின் தந்தை இறந்த செய்தி கேள்விப்பட்டதுமே கமலி ஆறுதலாய் கடிதம் எழுதினாள் -

தான் வாயும் வயிறுமாய் இருப்பதால் மணாலியிலிருந்து வர முடியாததற்கு வருத்தம் தெரிவித்தவள், பவித்ரா தன்னுடன் வந்து சில மாதங்களேனும் தங்கிச் செல்லும்படி பரிவுடன் வற்புறுத்தி இருந்தாள் .



பவித்ராவிற்கு எங்கும் கிளம்ப மனமில்லை.

அவளைக் கிளப்ப மெனக்கெட்டதெல்லாம் மோகன்தான்.

''பரீட்சைக்குப் படிப்பதில் ஒரு மாசம் போச்சு... இனி வேண்டாததை நினைத்து மறுகுவே... ஒரு மாற்றத்திற்கு மணாலி போய் வாயேன்... நீ திரும்பியதும் ஆக வேண்டியதைப் பார்ப்போம்...''

ஆக வேண்டியதாய் அவன் குறிப்பிட்டது எதை? தங்களின் திருமணத்தையா?

திருமண நினைப்பில் பவித்ராவின் முகம் சிவக்கவில்லை...

ஒருவிதமான நிம்மதி மட்டுமே...

தனக்கென்று ஒரு பரிவான துணை உண்டு என்ற பாதுகாப்பு மட்டுமே...

## 4

''உனக்குப் பைத்தியம்தான் பிடிச்சிருக்குது...''

நிஜ எரிச்சலில் சீறினாள் கமலி.

பதிலே இன்றி அவர்களது பிக்னிக்கிற்கான சில பொருட்களை எடுத்து வைத்தபடி இருந்தாள் பவித்ரா.

''மோகனுக்கு உன்னை விட 15 வயசேனும் அதிகமிருக்கும் - அவரைக் கல்யாணம் செய்துக்கறதாவது?''

''இது புது நினைப்பில்லை கமலி. கா... காதலுமில்லை. பல வருஷங்களாய் ஒருவருக்கொருவர் தெரியும்... வேறு சொந்தங்களும் இல்லை... ஆக நாங்க இணைவது ஒரு வசதியான... ஏற்பாடுன்னு...''

"உங்கப்பா அப்படி சொன்னாங்களா?"

"இல்லை... ஆனால் அப்படி ஒரு நோக்கம், நம்பிக்கை இருந்ததால்தான் மோகனை என்னை அழைக்க சதா பள்ளிக்கும் கல்லூரிக்கும் அனுப்பினாரோன்னு தோணுது."

"நம் தோழிகள் பலரை டிரைவர்கள் ப்யூன்ஸ் தான் வந்து கூட்டிப் போவாங்க - அதுக்காக?"

பவித்ராவிற்கு சிரிப்பு வந்தது.

"மோகன் எங்களுக்கு தூரத்து சொந்தம்னு கூட நினைப்பு... தவிர...."

"சொல்லு..."

"பள்ளியில் கூட மோகனைப் பார்த்த சிநேகிதிகள் அவர் பார்க்க ஓரளவு கவரும்படியாய் இருந்ததாய் சொல்வாங்க... எனக்குக் கூச்சமாய் இருக்கும்..."

"அப்பவே அவருக்கு வயசு முப்பது இருக்கும் - இப்ப மேலும் தளர்ந்துட்டார்... அது அறியாப் பருவத்தின் வெட்டிப் பேச்சு. உருவத்தை மட்டுமே கொண்டு மனுஷர்களை கணிக்கக் கூடாதுதான்... ஆனால் இத்தனை அழகும் இளமையுமான உனக்கு அவரை ஜோடியாய் நினைக்கவேக் கூட கூசுது... உனக்கேற்றவராய் ஒருவர் வருவார் பாரு..."

சந்தோஷ் இடைபுகுந்து பெண்களைக் கிளப்பினான். "இப்படியே பேசிட்டு உட்கார்ந்து உங்களுக்குக் குஷிதான் அம்மணிகளே - ஆனால் பிக்னிக் வருவதாய் ஒப்புக் கொண்டாச்சு- ஆக தயாரானால் நல்லது..."

கூட இரு குடும்பங்களுடன் ஒரு காத்திரமான வேனில் அவர்களது பயணம் தொடங்கினது.



மலைப்பகுதியில் முனகலாய் வாகனம் ஏற, பவித்ரா கவலையுடன், "வயிற்றுப்பிள்ளையோட இப்படி நீ வரணுமா கமலி?" கேட்டாள்.

"எம்பிள்ளைக்கு எல்லாம் ஒத்துக்கும் - எனக்கும் ஒரு மாற்றம் தேவைன்னு பட்டது. 'ரோத்தான் பாஸ்' பார்க்க வேண்டிய பனி மலை... நீ பார்க்கா விட்டால் எப்படி?"

"ஒரு மணி நேர கார் பயணம், அதற்குப் பின் குதிரையில் ஏறிப் போகணுமாமே?"

"கல்யாணமான புதிதிலேயே நாங்க அதெல்லாம் அனுபவிச்சாச்சு... ஆக நான் மறுபடி குதிரையின் முதுகை ஒடிக்கறதாயில்லை!"

"அடிவாரத்தில் எங்களுக்குப் பழக்கமான சாயுபின் டீக்கடை உண்டு. அங்குதான் பியாஸ் நதியின் ஆரம்பம்! கமலிக்குப் பிடிச்ச இடமது. நாங்க அங்கேயே இருந்துக்கறோம்" - என்றான் சந்தோஷ்.

"நானும் உங்களோடவே இருந்துடறனே?"

"எங்களைத் தனியே குஷாலாய் இருக்க விடவே மாட்டியா பவித்ரா?"

சந்தோஷ் பரிதாபமாய் முகம் வைத்துக் கெஞ்ச ஒருவழியாய் மற்றவர்களுடன் போக சம்மதித்தாள் -

ஊட்டி, கொடைக்கானல் போனதுண்டு. ஆனால் இமயத்துடன் ஒப்பிட அந்த மலை வாசஸ்தலங்கள் செப்பு பொம்மை போலிருந்தன.

தொலைக்காட்சி பெட்டியில் பார்க்கும் அதே அழகுக் காட்சியை 70 எம்.எம். திரையில் பார்க்குமளவு பிரம்மாண்டம்.

இமய மலையில் பயணப்பட்டது பயம் கலந்த அற்புத அனுபவமாயிருந்தது. வழியில் அடிக்கடி இராணுவத்தினரை, டாங்குகளுடன் பார்த்தாள்.

''வருஷத்தின் சில மாதங்களில்தான் 'ரோத்தான் பாஸ்' போய் வரலாம். மற்றபடி இது ராணுவத்தினருக்கு மட்டுமான பாதை...'' - விளக்கினார்கள்.

ஒன்றரை மணி நேர கடும் சரிவு ஏற்றத்தில், பனிமுகடுகளை அண்ணாந்து பார்க்க நேரவில்லை... புராணப்பட கைலாச செட்டிங் போல அவை இவர்களைச் சுற்றி அரணாய் நின்றன.

பளீர் என வெயில் அடித்தாலும் குளிர் ஆட்டியது.

ஐம்பது ரூபாய்க்கு கம்பளி கோட், தொப்பி, கையுறை, காலணிகள் என்று செட்டாக வாடகைக்குத் தந்த கடையில் நின்று தேவையானதைத் தேர்ந்தெடுத்தனர்.

ரத்த சிவப்பிலான ரோம அங்கியை இவளுக்கு மாட்டிய ஹிமாச்சல பெண் -

''ரஷ்ய ராணி போலிருக்கேம்மா - அழகான பெண்'' எனப் பாராட்டினாள், இந்தியில்.

அத்தனையும் மாட்டி, குளிரை சற்று விரட்டினாலும் விநோதக் கூச்சமாகவும் இருந்தது.

அங்கிருந்த அத்தனை பேரும் அதே வேஷத்தில் இருக்கக் கண்டபின் சற்றே சகஜமானாள்.

ஆனால் அடுத்தபடி குதிரை ஏற்றப் படலம் வர, மறுபடி மிரண்டாள்.

பரியின் கடிவாளத்தைப் பற்றி நின்ற காஷ்மீர இளைஞன் பரிகாசமாய் ஹிந்தியில் பேசிச் சிரித்தான் -



''என்ன சொல்றான்?''

''பாதுகாப்பான குதிரையாம் - பயமில்லைங்கறான்...''

சந்தோஷ் அவளை ஒருவழியாய் தாஜா செய்து குதிரையில் ஏற்றி விட, பனிமலையிலும் இவளுக்குச் சிறிது வியர்த்திருந்தது!

''கிளம்பலாமா?'' இவர்கள் குழுவின் தலைவர் குதிரையைத் தட்டிவிட, மற்ற குதிரைகளும் முன்னதைத் தொடர்ந்தன.

பவித்ரா இந்த புது அனுபவத்தை ரசிக்கத் தயாரானாள்.

மேட்டில் ஏறிய குதிரை சில இறக்கங்களில் இறங்க, இவளுக்கு இதயமே தொண்டை வரைக்கும் எம்பிய பயம்!

இங்கிருந்து சரிந்து உருண்டால்... எலும்பும் கூட எஞ்சாது! 'இமயமே என் சமாதி' என்ற பெருமையுடன் போய் சேரலாம்.

குதிரையின் கால் சிறிதே பிசகினால்... தளர்ந்தால்? குனிந்து மலைச்சரிவை, பாதாளத்தைப் பார்க்க பார்க்க பீதி கூடியது. இறுகக் கண்களை மூடினாள் -

''ஏன் கண்ணை மூடிட்டு விழுந்தால் வலிக்காதா?''

தமிழில் கேலி பேசியது ஒரு ஆண் குரல்!

## 5

அவசரமாய் கண்களை விரித்தாள் -

யாரது தமிழில் பேசியது?

அதுவும் அத்தனை உரிமையான உல்லாசத்துடன்?

அவர் குறிப்பிட்டது தன்னையா... வேறு எவரையோவா?

"நீழே பார்க்காமல் சுற்றிலுமுள்ள பனி சிரகங்களையே பார்த்து வந்தால் பயம் தெரியாது...'

இதமாய் சொன்னவனைத் திரும்பி முழுக்கப் பார்த்தாள். நல்ல உயரமானவன்... குதிரையின் மீது அமர்ந்தும் கூட அவன் உயரம் எடுப்பாகவே தெரிந்தது. போட்டிருந்த கருநீல அங்கியும் தொப்பியும் அவனுக்கு மன்னனின் கம்பீரத்தைத் தந்தன.

"இல்லை... குதிரையின் கால் தடுமாறினால்...."

"தினம் ஆயிரக் கணக்கில் உல்லாசப் பயணிகள் வரும் இடமிது. உயிருக்கு ஆபத்தென்றால் இத்தனை பேர் துணிந்து வருவார்களா? மலை ஏறிப் பழகிய குதிரைகள்... பயமில்லை..." என்றவன் குதிரையை செலுத்தியவனிடம் "பாய் நீரே நீரே..." என குதிரையின் வேகம் குறைந்தது - கூடவே இவளது அச்சமும்தான்!

"அங்கேப் பாருங்க..." அவனது விரல் சுட்டிய பக்கத்து மலையைப் பார்த்தாள் -

அதில் எறும்பு போல சில மனிதர்கள் ஊர்ந்து ஏறிக் கொண்டிருந்ததில் பிரமித்தாள்.

"அங்கே எப்படிப் போறாங்க?"

"துணிவிருந்தால் எங்கேயும் போகலாம் - மனுஷன் நிலாவிற்கே போய் வரலை?"

இப்போது அவளுக்குள் மேலும் தைரியம் ஊறியிருந்தது.

"ஐடிம்பா கோயில் பார்த்தாச்சா?" - பேச்சைத் தொடர்ந்தான்.



"ம்ம்... சுற்றிலும் பெரிய தேவதாரு மரங்கள் சூழ்ந்த புராதனக் கோயில்..."

"பார்த்ததும் கொஞ்சம் ஆச்சரியமும் பட்டிருப்பீங்களே?"

சொன்னவனை ஆச்சரியமாய் பார்த்து புன்னகைத்தாள் - "உண்மைதான்...இந்தக் கோயிலை முன்பே பார்த்திருக் கேனேங்கற ஒரு நினைப்பு... ஞாபகமும் வந்திருச்சு. 'ரோஜா' - சினிமாவில் கடத்தல் காட்சியில் காட்டும் கோயில் - இல்லையா?"

"ம்ம் - வஷிஷ்ட் வெந்நீர் ஊற்றுக்கள்?"

"இன்னும் இல்லை - நான் என் தோழியோடு தங்கியிருக்கேன் - அவ கர்ப்பம்ங்கறதால் அதிகம் அலைய முடியாது."

"இன்னும் சில மாசமாவது இங்கே இருப்பீங்க இல்லையா?"

"இன்னும் ரெண்டு வாரத்திலேனும் கிளம்பணும். அந்த வெந்நீர் ஊற்றிலே குளிக்கலாமா?"

"ம்ம் - குளித்தால் சரும வியாதிகள் குணமாகும்னு பேச்சு... உங்களுக்குத் தேவையில்லை... பளிங்கு...பட்டு போல இருக்கீங்க..."

இதற்கு என்ன சொல்வது எனப் புரியாமல் அவள் வேறெங்கோ பார்க்க,

"இறங்கலாம் - இங்கேதான்" என்றான்.

"ஓ... அதுக்குள்ளே வந்தாச்சா?"

"பேசிட்டு வந்ததில் தெரியலை..." என்றபடி இவன் இறங்க கை நீட்டினான்.

கையுறை மாட்டிய தன் கைகளைச் சற்றுத் தயங்கியே இவள் நீட்ட, அவன் தயக்கமே இன்றி அவளது இடையை இறுகப் பற்றி இறக்கி விட்டான்!

ஒரு வெப்பக் கதிர் இவளை ஊடுருவி உலுக்கியது!

பேசியபடி வந்ததில் பயம் தெளிந்தது. உண்மைதான்... ஆனால் இப்படி அதிக உரிமை எடுப்பது புது பயம் தருகிறதே...!

ஆக விலகியவள், தன் குழுவினரோடு கலந்து நடந்தாள். ஒன்றரை மணி நேரம் கழித்து மறுபடி வந்து இவர்களைக் கூட்டிச் செல்வதாய் சொல்லிவிட்டு குதிரைக்கார இளைஞர்கள் கிளம்பிவிட,

"பாவம்... குதிரைகள் களைக்கடாதா?" பரிதாபப்பட்டாள் பவித்ரா.

"அடுத்த பயணிகள் குழுவை மேலே ஏற்றி வந்து நம்மைக் கூட்டிப் போவார்கள் - குதிரைகளின் அசாத்திய பலம் இதில் எல்லாம் குறையாது..."

இப்போதும் அவளுக்கு விளக்கம் சொன்னது அந்த உயரமானவனே! ஏனோ அவனைப் பார்க்கக் கூச்சமாயிருந்தது.

மோகன் கூட தன்னைத் தொட்டதுண்டே... அப்போதெல்லாம் ஏற்படாத ஒரு பரபரப்பு, தடுமாற்றம் இப்போது ஏன்...?

கனத்த கம்பளி அங்கியையும் மீறி அவன் விரல்கள் இவளுள் அத்தனை மின்சாரத்தை எப்படி பாய்ச்சின?

ஓரக்கண்ணால் அவனை நோக்கியவள், அவசரமாய் பார்வையை விலக்கினாள் - ஏனெனில் அவனும் இவளையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்ததுதான்!



தரையில் உப்பு போல உறைந்திருந்த பனியைச் சிலர் திரட்டி உருட்டிக் கொண்டிருந்தார்கள்.

பல திரைப்படங்களில் இதேபோல பார்த்ததுண்டே... நாயக, நாயகியின் பனிப்பந்து விளையாட்டை...

ஆவலுடன் குனிந்து இவளும் இதையே செய்தாள். பனிபந்தைத் தூக்கியடிக்க, அது சிதறி அவள் மீது பூவாய் சொரிந்தது.

குதூகலமாய் சிரித்தாள்.

இதை ரசிக்க கமலியும் உடன் வந்திருந்தால் நன்றாய் இருந்திருக்கும் என்ற சிறு ஏக்கத்துடன் ஆசை தீர பனியை அளைந்தவளின் முன் சூடான பானம் நீட்டப்பட்டது.

"டீ குடிக்கலாமே."

தந்தவனை சற்று இறுக்கமாய் பார்த்தாள் -

"வேண்டாம்."

"இந்தக் குளிருக்கு இதமாய் இருக்கும்."

கோப்பை இவள் கையில் திணிக்கப்பட்டது.

இனியும் எப்படி மறுக்க என்றே பருகியவளுக்கு ஆவி பறந்த தேநீர் பனியின் குளிருக்கு வெகு இதம் என்று ஒத்துக் கொள்ளத்தான் வேண்டியிருந்தது.

"நன்றி."

அருகே நின்றவனின் உயரம் மறுபடி அவளை ஈர்த்தது.

அதற்கேற்ற உடல்வாகு...

அந்தக் கம்பீரத்திற்குப் பொருத்தமான முகக்களை...

அதற்குச் சளைக்காத ஆழ்குரல்...

''நீழே போனது பியாஸின் பிறப்பிடத்தைப் பார்க்கணும் நீங்க...''

''ம்ம்... என் சிநேகிதி கமலி கீழே காத்திருக்கிறா... சேர்ந்து பார்ப்போம்...''

''பியாஸின் ரசிகையாச்சே நீங்க? தினம் அவளைச் சளைக்காமல் உட்கார்ந்து ரசிக்கிறவங்க, அவளது தொட்டிலையும் பார்க்கணும்...''

இவளுக்குத் துணுக்கென்றது!

தான் நதிக்கரையில் அமர்ந்து ரசிப்பது இவனுக்கெப்படி தெரியும்?

குழப்பத்தைக் குறைக்க தேநீரைச் சற்று உள்ளிறக்கினாள். தன் பாக்கெட்டிலிருந்து ஒரு இளம்பச்சை ஆப்பிளை எடுத்து நீட்டினான்.

''உங்களுக்குப் பிடித்த தங்க ஆப்பிள்... கழுவியே எடுத்து வந்தேன்...''

அவனது புன்னகை இவளுக்குள் அச்சத்தை வளர்த்தது.

## 6

'யாக்' எனும் பனிமலையின் எருது ஒன்று ஆடி அசைந்து வர, பயணிகள் ஆர்வமுடன் அதைச் சுற்றி குழுமினார்கள்.

இவனிடமிருந்து தப்பினால் போதுமென்று இவளும் அவர்களுடன் சேர்ந்து போனாள்.

அந்த ஆகிருதியான மிருகம் சாதுவாய் அத்தனைப் பேருக்கும் காட்சிப் பொருளாய் நின்றது. பலர் அதனோடு



இணைந்து படம் எடுத்துக் கொள்ள, அதுவும் மேல் எல்லாம் மூடி வழிய கம்பீரமாய் நின்றது!

''உன்னையும் 'யாக்'கோடு ஒரு படம் எடுக்கவா, பவித்ரா?'' அவன் ஒருமையில் விளித்து வினவ, இவளுக்குத் தூக்கியடித்தது. ஆக இவனுக்குத் தன் பேர் தெரியும்...

தன் பழக்க வழக்கங்களும் பரிச்சயம்! நாய் துரத்த ஓடும் பூனை கூட சுவரில் முட்டி நின்றதும் முதுகு வளைத்து அத்தனை நகங்களையும் நீட்டி சீறுமே...

அது போலொரு துணிவு இவளுக்குமே வந்தது. கல்லூரி கூடைப் பந்து அணியில் விளையாடிய இவளது உயரமும் பெண்களுக்குள் சமானியமில்லை.

தன் ஐந்தரை அடி உயரத்தை நிமிர்த்தி, கம்பீரமாய் அவனை ஏறிட்டாள் -

''என்னைப் பற்றி உங்களுக்கு வேறென்ன தெரியும்?''

''இலக்கிய பட்டதாரி'' - முறுவலுடன் பதில் வந்தது. ''தவிர உங்க சிநேகிதி வீட்டில் உதவிய பிறகும் உங்களுக்கு அப்பப்ப பொழுது போகாமல் இடிக்குது. சமீபத்திய நாவல்கள் வரை எங்க வீட்டு நூலகத்தில் உண்டு... வந்து எடுத்துக்கோ பவித்ரா.''

ஒருவேளை இவர் சந்தோஷின் நண்பரோ?

ஆக அதிகம் எகிறக் கூடாது.

''நீங்க எங்கே வசிக்கறீங்க?'' - சற்று குரலைக் குறைத்து விசாரித்தாள்.

''உங்க ரிஸார்ட்டின் அருகேதான்... நதிக்கரையில் நீ உட்காரும் இடத்திலிருந்து பார்த்தால் என் வீடு தெளிவாய் தெரியும்...''

குதிரை முதுகில் இருந்தபோது இவளது பயம் நீக்கியவன்,

இப்போது பயத்தைக் கிளப்பினான் -

"நல்லது..." என்றவள் ஒதுங்கிப் போனாள் - அவனும் அவளைத் தொடரவில்லை.

மறுபடி குதிரையேறி திரும்பும் போது, இப்புதியவனைப் பற்றிய கேள்விகளுடன் குழப்பங்களுடன் பயணித்தவள், பயப்பட மறந்தே போனாள்!

சாயுபுவின் தேநீர் கடையில் சூடான சப்பாத்தி சப்ஜியை உண்ட நேரம் பயணிகளின் கூக்குரல் கேட்டு வெளியே வந்து பார்த்தவள் பிரமித்தாள்.

கண்ட எல்லாரும் ஆனந்தமாய் கூவினார்கள் -

"அடடே... அற்புதம்... என்னா அழகு!" வானத்திலிருந்து பஞ்சு தூவியது போல பனி பொழிந்து கொண்டிருந்தது!

சரசர என்று தரை வெண்பனியால் மூடப்பட்டுக் கொண்டிருந்தது.

"என் வாழ்நாள் முழுக்க மறக்க முடியாத நாள் இது, கமலி."

"நாங்க கூட இப்படி ஒரு பனிப்பொழிவைக் கண்ட தில்லை... ஏதோ தேவலோகத்தில் இருப்பது போலில்லை?"

"குளிர்தான் தாளலை!"

சுகமான அயர்ச்சியுடன் வேனில் ஏறித் திரும்பினர்.

"பியளின் பிறப்பிடம் எப்படி?"

"சிறு தொட்டி போல கட்டி விட்டிருந்தாங்க... அதன் நடுவே நாலு வாளி நீர்தான் இருப்பது போலத் தோணுது! ஆனால் அதுவே இப்பெரிய நதியின் பிறப்பிடம்னா... எல்லாமே அதிசயமாய் தோணுது. கமலி..."



கூடவே அவனது முகமும், புதிர் பேச்சும் நினைவிற்கு வந்தன.

அதுவும்தான் அதிசயம்...!

பதிலுக்கு அவன் பெயரென்ன என்று கேட்டிருக்கலாமே?

வேறு வினையே வேண்டாம்!

அறியாதவளைப் பற்றி இத்தனை விவரம் தெரிந்து கொண் டவன், இவள் தன்னைப் பற்றி அறிய ஆர்வம் காட்டினால் என்னதான் செய்ய மாட்டான்?

"உடம்பு சரியில்லையா பவி?"

"இல்லையே கமலி... கொஞ்சம் அசதி அவ்வளவுதான்..."

வீடு வந்து தூங்கி எழுந்த பின்பும் தோழியின் முகக்களை மீளாததில் கமலிக்கு வருத்தம்தான் -

"உனக்கு ஒரு மாற்றமாய் இருக்குமேன்னுதான் போனோம்... நீ ஒரேயடியாய் வெளிறித் தெரியறே...? உன் வழக்கமான மாலை நதிக்கரை உலாவலுக்குக் கூட போகலையே? நானும் வரவா துணைக்கு?"

இக்கரிசனையான கேள்விகளில் பவித்ராவின் நெஞ்சு இளகியது. இப்போது மனம் விட்டுப் பேச தனக்கு உலகில் இருக்கும் ஒரே ஜீவன் கமலிதான்...

அவளிடமும் மூடுமந்திரம் செய்து பலனில்லை!

"நம்ப பிக்னிக்... அதான் ரோதான் பாஸ் போனபோது ஒரு தமிழரைச் சந்திச்சேன் கமலி..."

இவள் தயங்கி நிறுத்தியும் மூத்தவள் குறுக்கிடவில்லை.

"நான் குதிரையில் போன போது பேச்சுக் கொடுத்தார்."

''டூரிஸ்ட்டா?''

''இல்லை... ஆனா நம் வீட்டிற்கு பக்கத்தில்தான் தன் வீடும்னு சொன்னார்.''

''ஆள் பார்க்க எப்படியிருந்தார்?''

''நல்ல உயரம்... கம்பீரமாய் தெரிஞ்சார்...''

''சிவப்பா கருப்பா?''

''மாநிறத்துக்கு ஒரு மாற்று கூடன்னு சொல்லலாம்.''

''பாண்டியனாய் இருக்குமோ?'' கமலி தனக்குள்ளாகவே கேட்டுக் கொண்டாள்.

''யாரது?''

''பாண்டியன் மோட்டார்ஸ் கேள்விப்பட்டிருப்பியே?''

''எங்களுடையது சிறு கடைன்னாலும், அவர்களுக்கும் வாகனம் தொடர்பான விற்பனை, வியாபாரம்ங்கறதால் நிறையவே கேள்விப்பட்டிருக்கேன் - முன்னணி கார் டீலர்ஸ் அவர்களுக்கு முக்கிய ஊர்கள் எல்லாவற்றிலும் கடைகள், கிளைகள் உண்டு. சென்னையில் 'பென்ஸ்' உட்பட விற்பனைப் பிரதிநிதிகள் அவங்கதானே?''

''அதேதான்... அந்த நிறுவன பெரும்புள்ளியின் மகன்தான் பாண்டியன் - சந்தோஷ் ஒரு முறை சந்தித்தாராம் நல்ல உயரம், கம்பீரம்னு சொன்னார்...''

''அவங்க வீடு எப்படி மணாலியில்?''

''கம்பெனியின் விருந்தினர் விடுதி பக்கத்தில்தான் இருக்குது அந்தப் பாண்டியனுக்கு உடம்பு முடியாமல் போய், தேறுவதற்காய் இங்கு வந்திருப்பதாய் கேள்வி...''



பார்த்தால் உடல் நலம் குன்றியவர் போலத் தெரியவில்லையே...? தீவிர இத்தனை பெரும் புள்ளிக்கு தன்னிடம் ஏன் இத்தனை ஆர்வம்?

உதிரி பாகங்களை விற்கும் எளிய கடை... அதைக் கூட வெற்றிகரமாய் நடத்தமுடியாமல் துவண்டு உயிரையே விட்டவரின் மகளான தன் மீது என்ன ஈர்ப்பு? தன்னை சந்தித்து பேச வேண்டும் என்றே ரோத்தான் பாஸிற்கு வந்தாரோ?

''சந்தோஷம், பாண்டியன் மோட்டார்ஸின் விருந்தினர் விடுதி இங்கிருந்து பார்த்தால் தெரியுமா?'' கமலி கேட்க, ஏதோ ஒரு பத்திரிகையில் மூழ்கியிருந்த சந்தோஷ் அதை மடித்துபடி எழுந்து வந்தான் -

''அதோ நிறைய விளக்குகள் எரியுதே - அந்த மாளிகை தான்.''

''அந்த மிஸ்டர். பாண்டியனைச் சந்தித்ததாய் சொன்னீங் களே?''

''ம்ம்... பெரும்புள்ளி.... சும்மா மரியாதைக்கு ஒரு சலாம் போட்டுட்டு வந்தேன்...''

பவித்ரா அந்த விசாலமான மாளிகையையேப் பார்த்திருந்தாள்... பாதி இருளில் அதன் விளக்குகள் விஷமமாய் கண் சிமிட்டுவது போலிருந்தது....

## 7

எள், வற்றல், உளுந்து எல்லாவற்றையும் கச்சிதமாய் அளந்து, வறுத்து தனித்தனி பாத்திரங்களில் இட்டாள் பவித்ரா.

மறுநாள் கமலியும் அவள் கணவனுமாய் ஏற்று நடத்தும் விடுதியில் 16 பேருள்ள ஒரு தமிழ் குழு வரப்போவதால் அதற்கான ஏற்பாடுகளில் மும்முரமாய் இருந்தார்கள் -

"திப்பு, இது சாம்பார் பொடிக்கு. இது எள்ளுப் பொடி. அது மிளகாய் பொடிக்குன்னு எழுதியே ஒட்டியிருக்கோம் - அதே பாத்திரங்களில் அரைச்சதை எடுத்துட்டு வா - என்ன?"

அரைகுறை ஹிந்தியில் உதவிக்கு இருக்கும் பொடியனிடம் விளக்கினாள் கமலி.

"இத்தனையுமா மேம் சாப்...?"

"ரெண்டு நடையாய் போய் வந்திருடா - இன்னைக்கு கிளப்பில் 'மைக்கேல் மதன காமராஜன்' போடறாங்க - உனக்கும் சேர்த்துதான் டிக்கெட் எடுத்திருக்கு..."

"கமல் படமாச்சே?" - உற்சாகமானான்.

"கூடவே குஷ்பூவும் உண்டு - ஓடு..." என்றவள் இளம் சூடான ஆலிவ் எண்ணெயைத் தொட்டு தலைக்கு தேய்க்கலானாள் -

"நாளையிலிருந்து மூணு நாளைக்கு இப்படி ஆராம்ஸே உட்கார பொழுதிருக்காது... பரவாயில்லை நீயும் இருந்ததால் அறைகளை தயார் பண்ணி, தோசை, வடை மாவும் அரைத்து வச்சாச்சு... நிதானமாய் தலையை அலசின பிறகு, ஒரு தூக்கம் - பிறகு கிளப்!"

பெண்கள் இருவரும் இளம் வெயிலில் அமர்ந்து உடம்பெங்கும் கடுகு எண்ணெயைத் தடவினார்கள் -

"இந்த ஊர் உனக்கு ஒத்துகிச்ச பவி - கழுவியெடுத்த நகை போல மின்னறே!"



"இதமான சீதோஷ்ணம், தூய காற்று... எல்லாவற்றுக்கும் மேலாக பாசம் காட்ட நீ... அதான்."

சிறந்த மருந்தாகிய காலம் அப்பாவை இழந்த ரணத்தைக் கூட சற்று குணப்படுத்தியிருந்தது.

மனம் தேற கூடவே உடலும் தேறியிருந்தது.

"இன்று என்னுடைய சேலை ஒன்றைக் கட்டேன் பவி." கன்னங்களில் எண்ணெயை வட்டமாய் தேய்த்தபடி சொன்னாள்.

"என்ன திடீர்னு...?"

"அது எனக்குப் பிடித்த மஞ்சள் ஷிபான். கறுப்புப் புட்டா இருப்பதால் கருகமணி செட்டும் சேர்ந்தால் அசத்தும்... நான் உடுத்தி நாளாச்சது... இனி குழந்தை பிறக்கும் வரை மெல்லிக புடவையைக் கட்ட முடியாது..."

வாஞ்சையுடன் தன் உப்பிய வயிற்றைத் தடவினாள்.

"குழந்தை பிறந்து ஒரு வயசாகும் வரை கூட கட்ட முடியாதுதான் - கசங்கும் அல்லது கட்டி ஈரமாக்கிடுவான்.

"ஆமாம்... ஆக இன்னைக்குக் கட்டேண்டி..."

"ரெண்டு வருஷம் கழிச்சு நீயே கட்டி..."

"பிகு பண்ணுவா ஏகத்துக்கு..."

"இல்லை... சரி!"

உண்மையிலேயே அம்மெல்லிய மஞ்சள் புடவையும் அதற்கு எடுப்பு சேர்த்த கருகமணி நகைகளும் பிரமாதம்தான்.

ஆக பவித்ராவைப் பிரமாதப்படுத்தின.

ஷாம்பூ மணத்த பட்டுக் கூந்தல், அதில் சொருகப்பட்ட மஞ்சள் ரோஜா, சிற கறுப்புச் சாந்து, சற்றுக் கூடுதலான கண்மை...

இந்த அலங்காரமே பார்த்தவர்களைக் கிறக்கியது!

"நான் வரலைடா கமலி..." - சோபாவில் தொப்பென சரிந்தான் சந்தோஷ்.

"என்னங்க... எல்லாருக்கும் டிக்கெட் எடுத்ததே நீங்க தானே?"

"எடுத்தேன் - வழக்கமாய் எல்லாப் பயல்களும் உன்னைப் பார்த்த பிறகு பொறாமையால் என்னை ஒரு முறைப்பு விடுவானுங்க - அதுல ஒரு குஷி - இப்ப எல்லாரும் பவித்ராவைத்தான் பார்க்கப் போறான்..."

"எல்லாம் நமக்குத்தானே பெருமை - வாங்க..." கிண்டலும் சிரிப்புமாய் கிளம்பினார்கள்.

சீராக வெட்டப்பட்ட பரந்த புல்வெளியின் நடுவே பாந்தமாய் நின்றது 'கிளப்'.

"விளையாட்டுப் போட்டிகள் நடத்தவும், மாலைப் பொழுதில் பலர் சேருமிடமாகவும் 40 வருஷங்களுக்கு முன் உருவான கிளப் இது. சுற்றுலா பயணிகளும் இதன் தோட்டத்தை ரசிக்க வந்ததால் கம்பளி குல்லாக்களும், சால்வைகளும் விற்கும் கடைகளும் பரப்பியாயிற்று..."

ஆர்வமாய் அக்கடைகளைச் சுற்றியவள் சில 'குஜு தொப்பி'களை வாங்கினாள். பாப்கார்னுடன் படம் பார்க்க அமர்ந்து எதேச்சையாய் மறு இருக்கையைப் பார்த்தவளின் இதயம் சில நொடிகள் துடிக்க மறந்தது!



அங்கே நீண்ட கால்களை நீட்டி ஒரு வித அலட்சியத்துடன் உட்கார்ந்திருந்தது அவன்தான்...!

இவர் தான் பாண்டிய்னா?

ஆனால் அவன் தன்னை ஏனிந்த கோபத்துடன் முறைக்க வேணும்? சந்தோஷை தன் இருக்கைக்கு வர வேண்டி, இடம் மாறி விட வேண்டியதுதான் என்று எழ நினைத்தவளை, அவனது குரல் அதட்டியது -

"ஏன் நதிக்கரைக்கு வரலை?"

இப்போது இவளுக்குள் ஆத்திரம் கலந்து சிரிப்புதான் கிளம்பியது.

என்ன விளையாடுகிறானா இவன்?

நான் தினமும் தவறாமல் நதிக்கரைக்கு வருகிறேன் என்று இவனிடம் ஒப்பந்தம் பேசி காசும் வாங்கியது போல் அல்லவா அதிகாரம் தூள் பறக்கிறது?

பதில் சொல்லாமல் தன் இடத்தை மாற்றிக் கொண்டாள்.

அவளுக்குப் பிடித்த படம்தான் இது.

தேர்ந்த நடிப்பும் ஓயாத சிரிப்பும் விரிவிய நல்ல பொழுதுபோக்கு சினிமா - ஆனாலும் மனம் இன்று அதில் ஒன்றவில்லை. மாறி உட்கார்ந்த சந்தோஷ், புதியவனிடம் கை குலுக்கி பேசியதிலிருந்து அவன் பாண்டியன்தான் என்பது உறுதியாகி விட்டது.

இடைவேளையின் போது அங்கு கூடியிருந்த நூறு பேரும் வெளியே வந்து மண் கோப்பையில் பரிமாறப்பட்ட தேநீரை ருசித்துப் பருகினார்கள் -

"என் கேள்விக்கு பதில் சொல்லாமல் நீ கிளம்ப முடியாது பவித்ரா..."

இவளை மதித்தாற்போல நின்றவன் கீழ் ஸ்தாயியில் ஏறக்குறைய மிரட்டினான்!

இவளது கோபம் எகிறினாலும் குரலைத் தழைத்தே கேட்டாள் -

"என்ன பதில்? உங்களுக்கு நான் ஏன் பதில் சொல்லணும்?"

"ஏன்னா உன்னைக் காணாமல் நான் தவிச்சுட்டேன்."

இந்தத் துணிச்சல் அவளைக் கலக்கியது.

ஏதோ காலிப்பயலின் துணிவிது என்று ஒதுக்கவும் முடியாது. பெரிய நிர்வாகத்தின் முதலாளி இவன்...

"எனக்குத் தோணலை... அதான்... தவிர அதைக்கேட்க நீங்க யார்?"

"இப்படி என்னைப் பற்றிக் கேட்பேன்னுதான் காத்திருந்தேன் பவித்ரா."

சிறு விஷமத்துடன் சிரித்தான் - "இப்ப கேட்டுட்டே... என்னைப் பற்றிய விவரங்களை எல்லாம் நான் தரத் தயார்..."

மேலும் சிரித்தவனின் முகம் அழகாய் மாறிப் போனது.

இளமையும் இனிமையுமாய் தோன்றினான். "வேண்டாம். மிகப் பெரிய பாண்டியன் மோட்டார்ஸின் முதலாளி இங்கு பெண்களை வேவு பார்த்தபடி இருப்பது ஏன் என்பது எனக்குத் தெரிய வேண்டிய அவசியமே இல்லை."

"ஆஹா... அப்படின்னா பவித்ரா அம்மாளும் வேவு நடத்திருக்கீங்க - அது என் பாக்யம்!"

என்ற அவனது கேலியில் முகம் சிவந்து போனாள்.



## 8

"கமலி உன்னோடு படிச்சவங்களா?"

"ம்ம் - கல்லூரியில் எனக்கு சீனியர்."

"நீ இன்னும் பள்ளி மாணவி போலிருக்கே..." என்றவனது முகத்தில் இப்போது கோபமில்லை... மாறாக களிவிருந்தது. அவளையும் மீறி பெருமூச்செறிந்தாள். ஆனால் 21 வயதிற்குள் வாழ்க்கை பல கசந்த அனுபவ மருந்துகளை அவளுக்குப் புகட்டியிருந்ததே!

"இனி எல்லாம் நல்லபடி இருக்கும்." என்றான் அழுத்தமாய்.

இதென்ன ஆருடமா?

"இனி உன் வாழ்வு பொறுப்பான கைகளில் இருக்கும்னு தோன்றியதால் சொன்னேன்."

"கடவுளை நான் நம்பறேன். நம் வாழ்வு அவர் கையில்தானே."

அவள் பொதுவாகப் பேச்சை மாற்றினாள்.

"எனக்கும் கடவுள் நம்பிக்கை உண்டு பவித்ரா. இல்லைன்னா தொழில் பயிற்சிக்காக ரெண்டு மாசங்கள் அயர்லண்ட் போக வேண்டிய நான் ஏன் மணாலி வரணும்?"

இவள் தன் விரல்களை ஆராய்ந்தபடி நின்றாள்.

கமலியும் அவள் கணவனும் என்ன இப்படி கூட்டத்தில் கரைந்து விட்டார்கள் - என்று ஒரு பக்க மனம் கடுப்படித்தாலும் மறு பக்க புத்தி பாண்டியனோடு பேசுவதை ரசிக்கத்தான் செய்தது.

''திடீர்னு எனக்கு பயங்கர வயிற்று வலி. அப்பண்டிசைட்டிஸ்னு உடனடியாய் அறுவை சிகிச்சை செய்து குடல் வாலை நீக்கிட்டாங்க... என் பெற்றோருக்கு நான் ஒரே மகன். அக்கா பிறந்து ஒன்பது வருஷங்களுக்குப் பிறகு வந்த தவப் புதல்வன்... ஆக அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு உடம்பு தேறன்னு இங்குள்ள எங்க விருந்தினர் விடுதிக்கு வந்தோம்.''

''அப்ப உங்க பெற்றோர்கள்?''

''அப்பா தொழிலை விட்டு வர முடியாது - அம்மாவும் நானுந்தான் வந்தோம்... அத்தானுக்கு மஞ்சள் காமாலைன்னு அக்கா போனில் அழ, அம்மா விசாகப் பட்டினம் போயாச்சு.''

இவளது மேலும் கீழுமான பார்வை ஓட்டத்தைப் புரிந்தவனாய் நகைத்தான்.

''இப்ப எனக்கு பூரண குணமாயாச்சு...''

''அதில்லை... அப்ப ஏன் இன்னும் இங்கே இருக்கீங்கன்னு கேட்க நினைச்சேன்.'' என்றாள் சற்று துடுக்காய்!

''இப்ப என்னை ஒரு புது நோய் தாக்கிடுச்சே.''

மேலும் குறும்பாய் மின்னிய அவனது விழிகளை எதிர்நோக்க அவளுக்குத் துணிவில்லை.

''படம் போட்டாச்சு...'' என்றபடி அரங்கினுள் விரைந்தாள். ஆனால் பாண்டியனின் சகவாசம் தன்னை லேசில் விடாது எனப்பட்டது.

அதே போல வீடு திரும்பிய கமலி பாடியதெல்லாம் பாண்டிய புராணம் தான்.

''என்ன பேசினே பவி?''

''என்ன?''



''அதான் பாண்டியனோட... அப்படி பேசினீங்க... அதான் நாங்க கொஞ்சம் ஒதுங்கிட்டோம்.''

''அவர்தான் பெரும்பாலும் பேசினார் - நான் கொஞ்சமாய் பேசினேன்...'' என்றவள் அவனது சிகிச்சையோடு வேறு சில விவரங்களைச் சொன்னாள்.

''எல்லாருக்கும் உம்மேல ஒரே பொறாமை, பவி.''

''அதான் ஏற்கெனவே உன் சந்தோஷ் சொன்னாரே - எல்லாம் உன் மஞ்சள் சேலை மகிமை!''

''ட... அதில்லை. பாண்டியன் உன்னோடு அப்படி இழைஞ்சு பேசினதால் விளைந்த பொறாமை! என் பக்கத்துல நின்ற ரெண்டு வடக்கத்திய பெண்கள் புலம்பிடுச்சுங்க. நாம போய், பேசி, ஈஷினாலும் கண்டுக்காதவர் இந்தப் பெண்ணிடம் பசை போட்டது போல ஒட்டிக்கிட்டாரேன்னு அதுங்க முணங்கவும் எனக்குக் கொஞ்சம் நிம்மதியாச்சு!''

''என்ன?''

''ஆக திரு. பாண்டியன் எல்லாப் பெண்களையும் துரத்தும் ஆளில்லைங்கற நிம்மதி!''

''ஹிமாச்சல பிரதேசப் பெண்களிடம் எல்லாம் விழுந்து வழியாதேன்னு அவங்க அம்மா கண்டிச்சு சொல்லிட்டுப் போயிருப்பாங்க...''

''ஓஹோ? அதான் அழகும் அம்சமுமான தமிழச்சி உன்னைத் துரத்தறாரா ஐயா?''

தோழியின் கேலியில் பவித்ராவின் கன்னங்கள் கலங்கின.

''ஏய்... என்னாச்சு?''

''என் அருகதை எனக்குத்தான் தெரியும் கமலி? அப்பாவைப் பற்றித் தெரிந்தால் எந்த கௌரவமான குடும்பத்தில் எனக்கு இடமிருக்கும்?''

''இதென்ன வீண் சஞ்சலம்? இதப் பார் - உங்கப்பாவோடு நான் அதிகம் பழகலை... ஆனாலும் விரக்தியில் தோல்வியில் துவண்டு தற்கொலை செய்துக் கொள்ளும் கோழையாய் அவர் தெரியலை. பிரேதப் பரிசோதனை செய்த மருத்துவர் அறிக்கை என்ன சொன்னது? சோடா சேராத தனி விஸ்கியோடு தூக்கத்திற்கான 'வேலியம்' மாத்திரையையும் சேர்த்து விழுங்கியதால் நேர்ந்த மரணம் என்றுதானே?''

''ம்ம்... போதையில் கூட ரெண்டு மாத்திரைகளை முழுங்கிட்டாரோ? நான் ஒருத்தி உலகத்துல அவரை நம்பி இருக்கறதையும் மறந்து தற்கொலைக்குத் துணிஞ்சிருக்க மாட்டார்னுதான் நானும் நம்பறேன், கமலி... ஆனால் ஊர் வாய் விதவிதமாய் பேசுதே?''

''அதை எல்லாம் மறுபடி ஏன் நினைக்கறே விடு...''

''அப்பா இறந்த அதிர்ச்சியில் இருந்த என் காது படவே எப்படி எல்லாம் பேசினாங்க தெரியுமா?''

''உங்க வீட்டு ஜீவனம்மாவும் அந்நேரம் உனக்குத் துணையாய் இல்லாதது வருத்தம்தான்... உம்மேல அவங்களுக்குத் தனி பாசம்...''

''அவங்களைப் பத்தி நூறு ஏச்சுப் பேச்சு! இருந்த காசை எல்லாம் அடிச்சுட்டு தலைமறைவாயிட்டா... அவளாலதான் இவர் உயிரை மாய்ச்சுக்கிட்டார்... இப்படியெல்லாம்... ம்ப்ச்.. எனக்கு மனுஷங்க மேல் நம்பிக்கையே போச்சு கமலி.''

''ஆனால் மோகன் மட்டும் விதிவிலக்கு - அப்படித்தானே?''



பவித்ராவின் முகம் சற்றே கனிந்தது.

''கஷ்ட நேரத்திலேயும் கூடவே நின்னார் கமலி. அவரில்லைன்னா என் நிலைமை?''

''வெளுத்ததெல்லாம் பால் இல்லை.

பனமரத்தடியில் உட்கார்ந்தால் அது கள்ளுக்காகன்னும் இல்லை. கூடவே இருந்ததால் மோகன் நல்லவர் - சொல்லாமல் மறைந்து போன ஜீ கெட்டவன்னு நினைக்கக் கூடாது நீ.''

''அப்புறம் எதைக் கொண்டுத்தான் மனுஷனை அளவிடறது?''

''ஒன்னுமே புரியலை உலகத்திலே
என்னமோ நடக்குது
மர்மமாய் இருக்குது'ன்னு 40 வருஷங்களுக்கு முன்னே சந்திரபாபு பாடினதுதான் இன்றும் நடப்பு...''

''இன்னொரு பழைய சோகப் பாட்டும் எனக்குத் தெரியும்.

'யாரைத்தான் நம்புவதோ பேதை நெஞ்சம்?

அம்மம்மா பூமியிலே யாவும் வஞ்சம்!''

''நம்பிக்கை இல்லாமல் வாழவே முடியாது பவி. இன்று பாண்டியன் உன்னிடம் அப்படி வலிய வந்து பேசியது எனக்கு ஏதோ ஒரு வித நம்பிக்கைத் தருது.''

''நான் யாரையும் நம்பறதாய் இல்லைப்பா... சூடு கண்ட பூனை ஆயாச்சு! பெரிய இடத்துப் பசங்களை நெருங்க விடறதேத் தப்பு.''

காட்டத்துடன் சொன்ன சிநேகிதியின் கரங்களை ஆதரவுடன் தடவி விட்டாள் கமலி.

## 9

மணாலி கடைத்தெருவை ஒரு சுற்று சுற்றி விடலாம் என்று கிளம்பியிருந்தனர் சிநேகிதிகள் இருவரும்.

மூன்று நாள் தொடர் வேலையை இருவருமாய் இணைந்து திறமையாய் சமாளித்திருந்தனர்.

ஏதும் பெரிதாய் வாங்காவிட்டாலும் கூட, காலார நடந்து, கண் குளிர காஷ்மீர பட்டுக்களை பார்த்துப் பின் சீன உணவகத்தில் சாப்பிட்டு வரலாம் என்று திட்டம்.

ஈயாடிய தன் கடைக்குள் நுழைந்தவர்களைத் தடபுடலாய் வரவேற்று புடவைகளைக் காட்ட ஆரம்பித்த நிம்பா லேட்டின் கவனம் ஐந்தாம் நிமிடமே திசை திரும்பியது!

பென்ஸ் காரில் வந்து இறங்கிய தாயும் மகளும் ஆர்ப்பாட்டமாய் கடையுள் வர, இவரும் மகா ஆர்ப் பாட்டமாய் அவர்களிடம் பாய்ந்தார்.

"என்ன பார்க்கறீங்க, மேம் சாப்?"

"தூய பட்டு - விலை உயர்ந்ததாய் இருக்கணும்."

"இருக்கே - நம்ப பஸாரிலேயே ஆறு, ஏழாயிரம் வரைக்கான புடவைகள் எங்கிட்ட மட்டும்தான் உண்டு. மற்றப் பசங்க நானூறு, ஐந்நூறுக்கு போலிப் பட்டைக் காட்டி சமாளிக்கிறவனுங்க..."

பீற்றலுடன் உள் அலமாரியிலிருந்து நயமான கிரேப் வகைகளை அள்ளிப் பரத்தினார்.

குழைவானப் பட்டு - முழுக்கக் கையால் நெய்த கொடிகளும் பூக்களுமாய் கண்ணைப் பறித்தது.

பார்ப்பதற்குக் காசா பணமா?



சிநேகிதிகளும் கண் நிறையக் கண்டு ரசித்தார்கள்! உல்லாசப் பயணிகளாய் வருபவர்கள் பெரும்பாலும் இந்தி அல்லது ஆங்கிலத்திலேயே பேசுவதால், அதுவரை சேட்ஜியுடன் ஆங்கிலத்தில் நடந்த சம்பாஷணை, திடீரென தமிழிற்குத் தாவியது.

"என்ன லவி பேபி, பிடிச்சிருக்கா?"

மகளிடம் கேட்டாள் தாய்!

"வித்தியாசமாய் இருக்குல்ல, மம்மி?"

"இதே சேலைங்க நம் ஊருக்கு வந்தால் கூட ரெண்டாயிரமாயிடும்... வேண்டியதை எடுத்துக்கோ."

கமலியும் பவியும் ஒருவரை ஒருவர் பார்த்து 'தமிழ்' என்று சத்தமின்றி உதடுகளை அசைத்தனர்.

கடைக்காரர் இவர்களின் பக்கம் திரும்பவுமில்லை. பந்தளவு வெண்ணெயை நக்கித் தீர்த்த பூனை ஓடும் சுண்டெலியைக் கண்டு மெனக்கெடுமா?

அவர் செல்வச் சீமாட்டிகளிடம் வியாபாரம் செய் வதிலேயே கண்ணாய் இருந்தார்.

"அம்மா எங்கேத் தங்கியிருக்கீங்க? 'ஹாலிடே இன்' தானே?"

"இல்லை பாண்டியன் விலாஸில்."

"ஓ... பெரிய இடத்து விருந்தாளி... நல்லது..."

'ஹிஹி'த்தார் சேட்.

"விருந்தாளி இல்லை... நான் பாண்டியனின் சொந்த அத்தை."

"ஓஹோ - உரிமையாளர்! நல்லதம்மா - அடிக்கடி எங்கடைக்கு அம்மா வரணும்."

இவர்கள் மெள்ள நழுவினார்கள்.

அப்பளம் சுட்டு அடுக்கிக் கொண்டிருந்த பவித்ராவிடம் ஓடி வந்தான் திப்பு.

அவன் கையிலிருந்த பளபளப்பான லாவண்டர் நிற உறையைப் பார்த்தவள் புருவங்களை உயர்த்தினாள்.

"என்ன கடிதமா?"

"பிரிச்சுப் படிங்களேன் நீதி."

கைகளை இடுப்பைச் சுற்றிக் கட்டியிருந்த சதுரத் துண்டில் கவனமாய் துடைத்த பின் உறையை நுனி விரல்களால் வாங்கினாள். அதிலிருந்து சன்னமாய் லாவண்டரின் மணம் எழுந்தது. இடப்புற ஓரமாய் மீன் சின்னத்துடன் 'பாண்டியன் விலாஸ்' என மின்னிய தங்க முத்திரை.

'நதிக்கரை குடில்' என்று இவர்களது விடுதியின் பெயர் எழுதப்பட்டிருக்க, அதைப் பிரிக்கத் தயங்கினாள்.

இந்த வீட்டாருக்கு வந்த அழைப்பை முதலில் அறியும் உரிமை தனக்கில்லையே...

"முதல்ல கமலிட்ட கொடு திப்பு."

"நீதி குளிக்கறாங்க - ஐயா போனில் பேசிட்டு இருக்காங்களே - இப்பப் போனால் திட்டுதான் வரும்."

இவளுக்கும் உள்ளிருக்கும் தகவல் என்னவாய் இருக்கும் என்ற ஆவலில் இதயம் படபடத்ததுதான்.

நனைந்த முன்னுச்சி மயிர் கற்றைகளைத் துவட்டியபடி வந்த கமலி தோழியின் முகம் பார்த்ததுமே கேட்டாள்.

"என்ன பவி?"

"என்ன... என்ன பவி?"



"முகமெல்லாம் சிவந்திருக்கே?"

"அப்பளம் வடகமெல்லாம் பொரிந்து வச்சேன்."

"இதென்ன திப்பு?" மேசையிலிருந்த இளம் ஊதா உறையை எடுத்துப் புரட்டியவள் பரபரப்பானாள்.

"பாண்டியன் விலாஸிலிருந்து வந்திருக்குதுடி."

"ம்ம்..."

"என்ன விவரம்."

"நீதான் பிரித்துப் பார்க்கணும்."

"ச்சே.. என்னடி... பார்த்து வச்சிருக்க வேண்டாம்?"

செல்லத் திட்டலுடன் கவனமாய் சிதையாமல் பிரித்தவள் அதே நிற காகிதத்தில் விரைந்து விழியோட்டினாள்.

"ஹைய்யோ...!"

அப்பள டப்பாவை இறுக மூடிய பவித்ரா ஏதும் கேட்கவில்லை. "இந்த அழைப்பே உனக்காகத்தான் பவிக்குட்டி."

"விவரத்தைச் சொல்லுமா."

"நீயே பார். அன்னைக்குப் புடவைக் கடையில் பார்த்தோமே ஒரு தாய் மகளை. அந்த அத்தை மகள் ரத்தினத்திற்கு நாளை பிறந்த நாளாம். நாளை மாலை பாண்டியன் விலாஸில் விழா - விருந்தும்தான்."

"அதற்குள் விவரங்களை மனப்பாடமே பண்ணிட்ட?"

புன்னகைத்த பவித்ராவிற்குள்ளும் சிறகு முளைத்து படபடத்ததுதான்!

"நாங்க இங்கு வந்து வருஷம் ஒன்னாச்சு... ஆனால் நீ வந்த இரண்டே வாரத்தில் பெரிய இடத்துச் சம்பந்... அதாவது அழைப்பு வருது."

"நாமும் தமிழர்கள் என்பதால் வந்த அழைப்பு."

"ஆங்... கடையில் பார்த்தப்ப அவங்க நம்மைத் திரும்பிக் கூட பார்க்கலையே?"

"அப்ப அவங்களுக்கு நாமும் தமிழ்தாங்கறது தெரியாதே - நாம நழுவிட்டோம்."

"அப்ப இது பாண்டியன் வேலை! தன் அத்தை மகளுக்கு ஒத்த வயசுப் பெண்கள்னு அழைக்கச் சொல்லியிருப்பார்."

"அவ நம்மை விட சின்னவளாய் இருப்பான்னு நினைக்கறேன்..."

"லலி பேபின்னு அந்த அம்மா கூப்பிட்டதை வச்சுச் சொல்றே? அலங்காரம் அப்படி... ஆனால் முகம் பேபிக்கு முத்தியிருந்தது."

"உனக்குப் பொறாமை, கமலி."

"எல்லாம் உனக்காகத்தான்" என்று நொடித்த சிநேகிதியைப் பாசத்துடன் கட்டிக் கொண்டாள்.

## 10

தங்கமாய் மின்னும் மணப்பெண்ணைப் போல 'பாண்டிய விலாஸ்' தன் மீதெங்கும் மின் பல்புகளை அள்ளிப் போட்டிருந்தது. தோட்டத்தின் அத்தனை மரங்களின் கிளைகளிலும் மின் விளக்குகள் ஓடி மறைந்து விளையாட்டுக் காட்டின. இரவின் பனி மூட்டத்தின் நடுவே இந்த ஜவலிப்பு மாயலோகம் போல கவர்ச்சியாய் தெரிந்தது.



"யப்பா, என்ன அலங்காரம், நாமும் ஆளுக்கு ஒரு புது கிரேப் சேலை வாங்கி சுற்றிட்டு வந்திருக்கணுமோ?"

"பிறந்த நாள் அந்தப் பெண்ணிற்கு... பேரென்ன லலிதாவிற்கு... நமக்கெதற்குப் புதுசு?"

"இங்கே நாம பரிதாபமாய் தெரியக் கூடாதில்ல, பவி?"

"அதெல்லாம் சரியாய்தான் இருக்கோம்."

ஆனால் உள்ளே போய் அங்கு கூடியிருந்த மேல் தட்டுப் பெண்களைப் பார்த்த பவித்ராவிற்கும் அதே சந்தேகம் தோன்றத்தான் செய்தது!

ஏழை எள்ளுருண்டையைச் சாப்பிட வெட்கப்பட்டால் ஆகுமா? - என்று தன்னைத் தானே தேற்றியும் கொண்டாள்!

"வாம்மா நீதான் பவித்ராவா?"

அதட்டலாகவே வரவேற்ற பெண்மணியை ஏறிட்டனர். பணக்கார வேஷங்கட்டிய நடிகை சுகுமாரி போன்ற ஜாடையிலிருந்த அத்தையம்மாவை இவர்கள் அவசரமாய் வணங்கினார்கள்.

இவர்களை ஆர்ப்பாட்டமாய் விசாரித்த பின்,

"நல்லது - எல்லாம் கேள்விப்பட்டேன் - உட்காருங்க..." என்றபடி வேறு பக்கம் நகன்றார்கள்.

"புடவைக் கடையில் இவங்க நம்மைப் பார்க்கலையே... பிறகெப்படி பேர் எல்லாம் தெரியுது?"

தங்களுக்குள்ளேயே கிசுகிசுத்தனர். பணக்காரர்கள் தங்களுக்கு மூன்றாவதாய் ஒரு ஞானக் கண்ணை உருவாக்கிக் கொள்வார்களோ?

"எல்லாம் கேள்விப்பட்டேன்" என்றால்... தன் தந்தை நொடித்து தற்கொலை செய்ததைக் குறிக்குமோ...?

"ஷ்..." என்று கமலி தன்னை இடிக்கவும்தான், தன் முன்னே ஒரு பணியாள் பழரசக் கோப்பைகளுடன் பவ்யமாய் நின்றது உணர்ந்து, ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

இவர்களைக் கடந்து போன அத்தையம்மாள்,

"வீட்டைச் சுற்றிப் பாருங்களேன்... இதோ அஞ்சு நிமிஷத்தில் லலி பேபி வந்திடும். கேக் வெட்ட..." என்று உரக்க அறிவித்தபடி போக, பின்னாலிருந்த ஒரு கூட்டம் பெண்கள் கிளுகிளுவென சிரித்தனர்.

அவர்களது கன்னட நெடித் தமிழிலிருந்து பெங்களூரி லிருந்து ஒரு விடுமுறைக்காய் மணாலி வந்திருப்பவர்கள் என்பதும் அதில் ஒரு பெண் பிறந்த நாள் கொண்டாடும் லலிதாவோடு படித்தவள் என்பது புரிந்தது.

ஆக லலிதாவும் அத்தையம்மாளும் வசிப்பது பெங்களூரில் "கேட்டியா? லலி பேபியாம்..."

"எத்தனை வயசானாலும் தாய்க்கு மகள் குழந்தைதானே..." மற்றொருத்தி பரிந்து வந்தாள்.

"இன்னும் லலிதா பி.ஏ. கூட முடிக்கலையே?"

"அட, பள்ளியில் அவ ஐந்து, பத்து, பன்னிரெண்டு வகுப்புக்களில் எல்லாம் 'கோட்' அடிச்சதை மறந்திடலாமா?"

"படிப்பில் கூற இல்லாட்டாலும், பேபி தன் அத்தான் விஷயத்தில் சர்வ கவனமாயிருக்கா. தன் பிறந்த நாளை அத்தானோடு கழிக்க 2,500 மைல் பறந்து வந்துட்டாளே?"

"மணாலியில் வந்துதான் பிறந்த நாளுக்கான புடவையைக் கூட எடுத்தாளாம். எடுத்த ஏழெட்டில் பாண்டியனுக்குப் பிடித்ததைத்தான் இன்று கட்டறாளாம்."



"ஏழெட்டு புடவையா? அதான் முப்பது ஆயிரத்தை ஒரே நாளில் ஊதி விட்டாச்சா?"

"ஆண்கள் பணம் சம்பாதிக்கறது எதுக்கு? நாம் இப்படி அதை அள்ளி விடலைன்னா பணக்கட்டை கரையான் அரிச்சுடாது?"

பவித்ராவிற்கு இப்பணக்கார பேச்சு நாராசமாய் இருந்தது.

"நாம் தோட்டத்து பக்கம் போகலாமா, கமலி?"

மற்றொரு தட்டில் வந்த முந்திரிப் பக்கோடாவுடன் தோட்டத்து புறமாய் நடந்தனர். ஜொலித்த மரங்களடியே ஆண்கள் மதுக் கிண்ணங்களுடன் நின்று வியாபார விருத்தி, பிரச்னைகளை அலசிக் கொண்டிருந்தனர்.

லட்சங்களும் கோடிகளும் சர்வ - அலட்சியமாய் குறிப் பிடப்பட்டன. பள்ளியில் கன்னியாஸ்திரிகள் இவளுக்குள் பதித்திருந்த சித்தாந்தமே வேறு.

சிறு வயதிலேயே கேட்டிருந்தாள்.

"ஏன் சிஸ்டர், கடவுள், சிலரை பணக்காரங்களா, பலரை ஏழையாப் படைச்சிட்டார்?"

"பணமிருப்பவனுக்கு பகிர மனமிருக்கான்னு சோதிக் கம்மா, பவி. செல்வமுள்ளவங்க கவனமும் அன்புமாய் அதை செலவழிக்கணும். அப்படிப் பிறரோடு பகிர்ந்தால்தான் ஆண்டவரும் தன் வீட்டை, அதாவது பரலோகத்தை நம்மோடு நித்ய காலத்திற்கும் பகிர்ந்துக்குவார்..."

"சரி - அப்ப ஏழைங்களுக்கு சோதனையே கிடையாதா?"

"அவனுக்கும் கடும் சோதனைதான்... தன் ஏழ்மையிலும் அவன் உண்மையில் உத்தமமாய், உற்சாகமாய் இருக் கானான்னு சோதிக்கறார்."

''நல்லவங்க எல்லாரும் மோட்சத்திலே இருப்போம்ல சிஸ்டர்? எங்க அம்மாவைக் கூட அங்க பார்ப்பேன்ல?''

அந்த இள வயது சம்பாஷனை இன்னும் பசுமையாய் நினைவில் இருந்தது.

அனுபவிப்பது தவறில்லை...

ஆனால் வரைமுறை அற்று... பிறரின் தேவைகளை அறியாமல், அவட்சியப்படுத்தி வாழ்வது...?

சரி இது வேற உலகம்...

தனக்கு ஒவ்வாத பணக்கார உலகம்...

இவர்களை பழிக்க தனக்கென்ன உரிமை?

''என்ன பவி... இன்னும் அவரைக் காணோம்?''

''யாரை?''

தெரிந்தே, தெரியாதது போல கேட்டதுதான்!

''ஏய்... அதான் பாண்டியனை.''

''ஏன் - அவருக்கா பிறந்த நாள்?''

''இருந்தாலும் அவர்தானே முக்கிய விருந்தாளி?''

இவருக்காகத்தானே லலிதா பிறந்த நாளைக் கொண்டாட இங்கே வந்திருக்காளாம்?''

அதெல்லாம் சேர்ந்து பவித்ராவை உறுத்திக் கொண்டு தான் இருந்தன. 'பாண்டியனின் கவனத்தைக் கவர ஒரு பெண் வந்து விட்டாள்' என்ற நிம்மதிதானே நியாயத்திற்கு வந்திருக்க வேணும்?

ஆனால் ஏனிந்த சுருத்த உறுத்தல்?

நெஞ்சு நரம்புகளைக் கண்டி விடும் வேதனை?



மற்றவர்கள் வீட்டை நோக்கி நகர, இவர்களும் நடந்தனர்.

வரவேற்பறையின் மையத்தில் முழு ஸூட்டில் கம்பீரமாய் நின்ற பாண்டியனில் அனைவர் கண்களும் மொய்த்தன!

ஆனால் அவனது பார்வை தன்னைத்தான் தேடி வரவேற்கின்றதோ?

அந்த முறுவல் தனக்காக மட்டும்தான் போல படுகிறதே?

அரக்கில் பூ வேலை செய்த புடவையும், அதன் வேலைப் பாடை எல்லாம் வீழ்த்தும் வகையில் மேனி எங்கும் ஜ்வலித்த வைரங்களுமாய் நின்ற லலிதாவைப் போய் வாழ்த்தினார்கள்.

சிறு மூங்கில் கூடையில் அழகுணர்வுடன் அடுக்கப் பட்டிருந்த பூங்கொத்தைப் பரிசாகத் தந்தார்கள்.

''நன்றி... உங்களை நான் பார்த்திருக்கேனா?'' - கொஞ்சலாய் கேட்டாள் லலிதா.

''ஆமாங்க... இந்த சேலையை வாங்க நீங்க கடைக்கு வந் திருந்த போது நாங்களும் கொஞ்ச நேரம் அங்கிருந்தோம்...''

''வாடா, லலி பேபி - கேக் வெட்டுவியாம்.''

அனைவரும் பாடி, கைதட்ட லலிதா கேக் வெட்டினாள்.

செதுக்கி எடுத்த முதல் துண்டைத் தன் தாயாரிடம் தர,

''முதல்ல மாப்பிள்ளைக்குக் கொடுடா பேபி'' - என்று வெட்கமாய் பணித்தாள் அத்தை!

பாண்டியன் அவசரமாய் மறுத்தான்.

''நோ - அம்மாவிற்குத்தான் - கல்யாணத்திற்குப் பிறகு முதல் துண்டு உன் கணவனுக்கு - அதுதான் முறை...''

காந்திய தன் வயிற்றை இதமாய் வருடி விட்டது போலிருந்தது பவித்ராவிற்கு!

## 11

பொறாமை தனக்குள்ள கெட்ட குணங்களுள் ஒன்றல்ல என்பதில் பவித்ராவிற்கு ஒரு பெருமையே உண்டு!

இளம் வயதிலேயே பிறரது அரிய உடைமைகளை, சாதனைகளைக் கண்டு பிரமித்தது, புகழ்ந்தது உண்டே தவிர வயிறு எரிந்ததில்லை!

இன்று உச்சந்தலையில் ஊர்ந்து வயிற்றில் எரிந்ததே ஒரு தீ... அதுதான் பொறாமையா?

அது ஏன் வரவேணும்?

லலிதா அவருக்கு... பாண்டியனுக்கு உறவு. தன் பிறந்தநாளை அத்தானோடே கழிக்க வேண்டும் என்று ஓடி வருமளவு உரிமை.

இதில் தனக்கேன் எரிச்சல்?

"என்ன பவி? இந்த டார்ஜிலிங் தேயிலையின் மணமும் குணமும் தனின்னு புகழ்ந்தபடி குடிப்பே? இப்ப உன் தேநீர் ஆறிக் கிடக்குதே - என்ன விஷயம்?"

"ம்... ஏதோ யோசனை."

"கப்பைக் கொடு. சூடாய் புதுசாய் போட்டுத் தரச் சொல் றேன். சூடாய் குடித்தபடி சுடச்சுட உன் கதையைச் சொல்லு..."

"அ... என்ன கதை?"

"அட... என்னையே கழட்டி விட்டுதே பார்த்தியா? நேற்று அவ்வளவு நேரம் உங்கிட்ட... அவர், பாண்டியன் என்னதான் பேசினார்?"

"மாடியின் அறைகளைச் சுற்றிக் காட்டினார்..."



"அதற்கா 35 நிமிஷமாச்சு?"

அவ்வளவு நேரமோ அவனோடு தனித்து இருந்தாள்?

உணர்ந்தவளுக்குக் கூசியது.

நேரம் போனதே தெரியாமல் அவனோடு அப்படி தனித்திருந்தது... தப்புதான்.

"உன்னிடம் ஒரு விஷயம் காட்டணும் பவி, வா" என்று அவன் அழைத்ததும் ஏன் அப்படியே கன்று போல அவனைத் தொடர்ந்தாள்?

ச்சே... எங்கே போனது புத்தி?

ஆனால் புத்திதான் தடம் புரண்டு போனதே...!

பாவம் தன்னிடம் இயல்பாய் வந்து பேசிய லலிதாவைப் பார்த்து எரிகிறது...

'இவன் ஆபத்தானவன் - சற்று ஒதுங்கியே நில்' என்று எச்சரித்து வைத்திருந்தவனோடு இழைகிறது!

சூடான புது கோப்பைத் தேநீரை அவளிடம் தந்த கமலி எதிரே உட்கார்ந்தாள்.

"நேற்றே உன்னிடம் கேட்க ஆசைதான்... ஆனா ஓசியில் கிடைச்சதுன்னா இவர் ஒரு 'பெக்' போட்டதால் இவரைக் கவனிக்கும்படி ஆயிடுச்சு. காலை விருந்தாளிகளை கவனிக்க அனுப்பவே இவ்வளவு நேரமாயிடுச்சு."

"ம்ம்..."

"அவங்க விருந்தினர் விடுதியே எவ்வளவு பெருசு - இல்லை?"

"ஆமாம்."

ஆனால் அதைக் காட்டவா அழைத்துப் போனான்?

"**வா** பவித்ரா... இதுதான் என் அறை."

இவளுக்குத் தயக்கம்.

"அதைப் பார்த்தியா?" என்றபடி அவன் சுட்டிய திசையில், மூன்று கால்களில் உயரமாய் நின்றது ஒரு விநோத வஸ்து!

"என்ன அது?"

மிக மென்மையாக வினவினாள்.

"பட்டிக்காட்டுப் பெண் போல கேட்கிறே - இது பைனாகுலர்ஸ் - தொலைவில் இருப்பதைப் பக்கத்திலாக்கிக் காட்டும் கருவி."

"ஐம்பது வருஷப் பழைமையானதாய் தெரியுது."

"ரொம்ப சரி - எங்கப்பாவின் அயல்நாட்டு சிநேகிதர் அவருக்குப் பரிசளித்தது. இங்கு சில மாசங்கள் தங்கி ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை எழுதினவர், கருவியை இங்கேயே பரிசாய் விட்டுட்டுப் போயிட்டார்... இங்கு நிறைய அபூர்வப் பறவைகள் உண்டுன்னு தெரிஞ்ச நானும் இது வழியே பார்க்க ஆரம்பித்தேன்."

"ம்ம்..."

"இதன் மூலமாய்த்தான் ஒரு அழகு மயிலைப் பார்த்தேன்."

"ஓ..?"

"அதன் பேர் பவித்ரா!"

திடுக்கிட்டாள்... ஆனால் இப்போது மர்மம் விடுபட்டிருந்தது!

ஆக இதன் வழியே பார்த்துதான் தன் நடவடிக்கைகளை நோட்டமிட்டிருக்கிறான்!

கருவியின் அருகே போய் மேலும் ஆராய்ந்தாள்.

"இருட்டிடுச்சே... இப்ப எதும் தெரியாது, பவி."



"இது மாயக் கருவி போல... இதன் வழியே தெரிபவர்களின் பேரைக் கூட உங்களுக்குத் தெரிவிச்சிடுதே..."

வாய் விட்டுச் சிரித்தான்.

"பார்த்தத் தவிப்பில விசாரிச்சுத் தெரிஞ்சுகிட்டேன்." தன் சிறு பிள்ளை போல நதியின் பனிநீரில் அளைந்ததும், புல்வெளியில் படுத்திருந்ததும் நினைவிற்கு வந்தது... நல்லவேளை... ஒதுங்கிய சேலையை 'இங்குதான் யாருமில்லையே' என்ற அலட்சியத்தில் நழுவ விடவில்லை. சிவந்த அவளது கன்னங்களைக் கொண்டே உள்ளோடும் நினைப்புப் புரிந்தவனாய் -

"தனிமையிலும் கூட நீ உன் பேரைப் போல, பவித்ரமாய்தான் இருந்தாய்" என்று சொல்ல வெட்கம் தாளாமல் வேறுபுறமாய் திரும்பினாள்.

"உன் குழந்தைத்தனம், அதனூடே கலந்திருந்த சோகம், உன் ரசனை, இயல்பு, அழகு எல்லாமே என்னை ஈர்த்தது பவித்ரா..."

பியாலில் மூங்கியே எழுந்தது போலிருந்தது அவளுக்கு!

"உன் பிறந்த நாள் எப்போ பவி?"

"இன்னும் மூணு மாசம் இருக்குதே..."

"ஓ... அது போதுமே... உன் பிறந்த நாளின் போது நான் உன்னருகே நிற்கணும்... அதே போல என் ஒவ்வொரு பிறந்த நாளன்றும் நீ என் பக்கத்தில் இருக்கணும்... இருப்பேயில்லையா?"

சற்று முன் பருகிய பழரசத்தில் போதை சேர்ந்திருந்ததா என்ன?

பின் ஏனிப்படி தலை சுழலுகிறது...?

அப்பா இறந்த சமயம் கூட இப்படித்தான்... ஆனால் அது துன்பமும் துக்கமுமான ஒரு அனுபவம்.

இது ஒரு மாதிரியான சுக சுழற்சி!

அந்நிலையிலும் லலிதா பற்றிய ஒரு சந்தேகம் அவளை அரித்தது...

"நீங்கதானே லலிதாவிற்கு அவளது பிறந்த நாள் புடவையை தேர்ந்தெடுத்தீங்களாம்?"

இதென்ன சம்பந்தமில்லாத ஒரு விசாரிப்பு என்று புருவம் நெரித்தவன்...

"ம்ம்? சில புடவைகளைக் காட்டி எது கட்டன்னு கேட்டா... அதுல மிக விலை உயர்ந்தது எதுவோ அதையே கட்டுன்னு கம்மாச் சொன்னேன்... அவ்வளவுதான்."

"ஓ...?" அழகாய் முறுவலித்தவளின் விரல்கள் அப்பழைய கருவியைத் தடவின.

"இனி இது எனக்குத் தேவையில்லை பவி... இப்ப மயில் என் பக்கத்தில் வந்திடுச்சே..."

இவளை மிக நெருங்கித்தான் நின்றான்.

ஆனாலும் அவளைத் தொடவில்லை.

உடம்புகளின் வாசனையும் மூச்சின் வெப்பமும் சிலிர்க்கவூட்டும் அளவிலான நெருக்கம்.

அவன் தன்னைத் தொட மாட்டானா என்ற ஏக்கமும், தொட்டு விடுவானோ என்ற வெட்க விதிர்ப்புமாய் நின்றிருந்தாள்.

இவர்களோட கூட நேரமும் நின்றுதான் போனதோ...?

"அத்தான், அம்மா உங்களைச் சாப்பிட கூப்பிடறாங்க..."



லலிதாவின் குரல் அவர்களை உலுக்கும் வரை அவர்கள் தன்னிலையிலேயே இல்லை...

## 12

அரைகுறையாய், மென்று முழுங்கி சிநேகித் சொன்னதைக் கேட்டு விட்டே கமலி குதித்தாள்!

"ஆக அந்த அத்தையம்மாள் பதறியதில் அர்த்தம் இல்லாமலில்லை... என்னைத் தூண்டி துருவிட்டாங்க, பவி."

"என்ன கேட்டாங்க."

"எத்தனைக் காலமாய் உங்களுக்குப் பாண்டியனோடு பழக்கம் - குடும்ப நண்பரா? பவித்ரா எப்ப வந்தா, எத்தனை நாள் தங்குவான்னு செம சோதனை! சமாளிக்க முடியலைப்பா - ஆக ஒரு வழியாய் நான் அந்த விஷயத்தைச் சொல்லி அவங்க வயிற்றில் பாலை வார்த்தேன்."

"என்ன விஷயம்?"

குழம்பிப் போய் கேட்டாள் பவித்ரா.

"அது சரி - உன் மோகனைப் பற்றி சொன்னேன்ப்பா..."

இறுகிய பனிப்பந்தை யாரோ தன் தலையில் மோதி உடைத்தது போலிருந்தது.

"மோ... மோகனா?" - உலர்ந்த உதடுகள் உச்சரித்தன. "சிறு வயதிலிருந்தே உன் குடும்ப நண்பர்னா அது மோகன்தான்னு சொன்னேன்... அப்பாவும் இல்லாத இந்நிலையில் அவர் காட்டும் அனுசரணை.. சீக்கிரமே உன்னைப் பார்க்க ஓடி இங்கே வந்திடுவார்னதும்... அத்தையம்மா முகத்து சிரிப்பைப் பார்க்கணுமே."

இவளுக்குள்ள குற்ற உணர்வு கட்டது.

மோகனைப் பற்றி சமீபமாய் நினைக்கவுமில்லையே...

கமலியுடன் அவனைப் பற்றி பேசினாளே ஒழிய மோகனை நன்றியுடனேயோ பிரேமையுடனேயோ நினைக்கவில்லை...

இப்போதென்ன... என்றுமே அவரை அப்படி எண்ணி உருகியதில்லை. ஒருவனைப் பார்த்த நொடியில் உடம்பெங்கும் ரத்தம் வெப்பமாய் பாயும் உணர்வெல்லாம் புதியது!

அவன் பேரைக் கேட்டதும் சிலிர்ப்பது...

அவன் பேசக் கேட்டு கேட்க ஏறும் கிறுகிறுப்பு...

இதெல்லாம் மோகனோடு பழகையில் முகிழ்க்காத அரும்புகள்.

பள்ளியில் இவளை அழைத்துச் செல்ல சில சமயங்கள் மோகன் வர,

"ஏய்... அதாரு அத்தானா...? ஆள் பரவாயில்லை" என்று தோழிகள் சீண்ட ஒரு விதமான கூச்சம் வந்ததுண்டு. ஆனால் கல்லூரி காலத்தில் மோகனைப் பார்த்த சிநேகிதிகள் -

"அதாரு உன் மாமாவா... சித்தப்பாவா?" என்று விசாரித்ததும்,

"ச்சே அவரைப் பார்த்தா அத்தனை வயசானவர் போலவா தெரியுது?" என்று பொங்கித் தாங்கினதுமில்லை.

"இல்லை - எங்க குடும்ப நண்பர்" - என்றதோடு சரி. இப்போதோ தனக்கென்று யாருமில்லாத இந்த உலகில் இவராவது மிஞ்சினாரே என்ற ஆசுவாசம்.

மோகனோடு பல முறை சேர்ந்து பயணித்தது உண்டு.

அருகருகே நின்றது கணக்கற்ற முறைகள்...



ஒரு முறை கூட மோகன் தன்னை இழுத்தணைத்துக் கொள்ள மாட்டாரா, மெள்ள தொடவேனும் செய்யக் கூடாதா என்று மோகப் பிசாசு அவளைப் பிடித்து உலுக்கியதில்லை.

அவனது கன்னத்தில் தன் உதடு பதிந்தால் எப்படி இருக்கும் என்ற தாப ஆராய்ச்சியில் மனம் இறங்கியதே இல்லை..!

பாண்டியனோடு பழக ஆரம்பித்ததிலிருந்துதான் இந்த உணர்வுகள் அவளுக்குள்ளே இருந்து மத்தாப்பாய் சீறுகின்றன...!

ஆக இதுதான் காதலா?

அல்லது காதலின் ஒரு பகுதி?

அப்படியானால் மோகன் மீது என்றுமே இதற்கு ஆழ்ந்த நேசம் இருந்ததில்லை.

ஒரு நிமிஷத்தில் தன் மனமே அவளுக்குத் தெளிவானது.

நெஞ்சில் பன்னீர் தெளித்தது போன்ற ஜிலுஜிப்பு...

ஆனால் அதை அனுபவிக்க முடியாமல் ஒரு சூடான கேள்வி தலை தூக்கியது.

"மோகன் மனதில் என்ன இருக்கிறது?

ஆணுக்குமே 35 வயதென்பது மனைவி, ஒரு குழந்தைகளுடன் திருப்தியாய் வாழ வேண்டிய பருவமில்லையா?

அப்படியிருக்க அவன் இன்னும் தனியாளாய் நிற்பது ஏன்?

"எதற்கும் கவலைப்படாதே பவி... உனக்கு யாரிருக்கான்னு கலங்கக் கூடாது... எனக்கும்தான் உன்னைத் தவிர யாரிருக்கா?" என்று வேறு சமீப நாட்களாய் வசனம் விடுகிறாரே!

ஆக மோகன் தன்னைக் காதலிக்கிறாரா?

பாண்டியன் தெளிவாகவே சொல்லி விட்டார்... தான் அவரை ஈர்த்து விட்டதாய்... ஆனால் அவரும் கல்யாணம் பற்றி ஏதும் சொல்லவில்லையே?

'ஒவ்வொரு பிறந்த நாளின்போது நீ என்னோடு இருக்க வேண்டும்' என்று சொல்லவில்லை? அப்படியானால் காலத் திற்கும் நாம் சேர்ந்திருக்க வேண்டும் என்றுதானே அர்த்தம்?

''நீதி போன்...'' என்று வீட்டினுள்ளிருந்து திப்பு கத்த.

''இதோ வரேன்...'' என்றபடி கமலி உள்ளே போனாள். தனிமையின் இனிமையில் பாண்டியன் சொன்ன வார்த்தை களை நினைவிற்குக் கொண்டு வந்து அசை போட்டு ரசித்தாள்.

அவனது கரிய மீசையை. புருவங்களைத் தொட்டு நீவ வேண்டுமென துடித்தன அவளது வெட்கமற்ற விரல்கள்...

தனிமையில் நெக்குருகி நின்ற போது தன்னைத் தொடாத அவனது கண்ணியம்...

'கிளப்பில் உன்னிடம் கொஞ்சம் முரட்டுத்தனமாய் பேசிட்டேன்ல பவி? மன்னிச்சிரு... நீ ஒரு புது வித வெறியை என்னில் கிளப்பி விட்டாய். அன்று உன்னை நதிக்கரையில் பார்க்கவில்லைன்னதும் எனக்குத் தாங்கலை... உன்னைப் பற்றி நிறைய தெரிஞ்சுக்கணும்ர வெறி... உன்னைப் பார்க்க, பேச அலாதி ஆசை... இதெல்லாம் அசட்டுத்தனம்தான். ஆனால் பிடிச்சிருக்குது...''

பாண்டியனின் பேச்சையே அசை போட்டால் போதுமாயிருந்தது. இவளுக்கும் - மீண்டும் அரைக்கோப்பை தேநீர் கையில் குளிர்ந்து மிச்சமாகிப் போயிருந்தது!

''பவி... அவருக்கு நூறு வயசு...''

படபடப்பாக வந்தபடி சொன்னாள் கமலி.



''யாருக்கு - பாண்டியனுக்குத்தானே?''

''இல்லை... மோகனைச் சொல்றேன்... அவர்தான் இப்போது போன் செய்தார் - டெல்லி விமான நிலை யத்திலிருந்து பேசினார்... நாளையே மணாலி வர்றாராம்... அவரை அழைக்க நீ குலு விமான நிலையத்திற்குப் போகணுமாம்...''

கேட்ட பவித்ராவின் முகம் ரத்தம் வடிந்து வெளுத்துப் போனது...

13

டாக்ஸியின் ஓரமாய் ஒண்டி அமர்ந்திருந்தாள். குலுவிற்கும் மணாலிக்கும் இடையே ஒரு மணி நேரக் கார் பயணம். வழிநெடுக பசுமையான அழகு...

இப்போதும் பியாஸ் கண்ணில் பட்டபடியே இருந்தாள். ஆனால் இப்போது நதியின் நுரைப்பிலும் சுழிப்பு சிணுங்கலிலும் மனம் லயிக்கவில்லை.

தன்னை அழைத்துப் போகவே வருவதாய் சொன்னாராமே மோகன்?

இங்கு வந்து 15 நாட்களாகி விட்டன...

மனக்கொதிப்பு சற்று ஆறியிருந்ததும் உண்மை... இயற்கை தன் அன்னையாகி மடியில் தாங்கி ஆற்றியிருந்தாள்.

ஆக இங்கேயிருந்து கிளம்ப மனம் சம்மதிக்கவில்லை.

கமலியின் அன்பு, தோழமை.... எல்லாவற்றையும் விட...

பாண்டியனின் அறிமுகம்...

அவனுடனான பழக்கம்...

சிலிர்க்க வைத்த ஆசை வார்த்தைகள்!

அதை எல்லாம் அலசி ஆராயும் துணிவில்லை.

இங்கிருந்து கிளம்பினால் விருதுநகரைத் தாண்டி ஒதுங்கி நிற்கும் அவளது வீட்டில், உறவு சிநேகம் என்று யாருமின்றி மோகனை மட்டும் பார்த்து உப்பு சப்பில்லாமல் பேசியபடி இருக்க வேண்டிய நிர்ப்பந்தம்...

நினைப்பே கசந்தது.

பழைய ஹிந்தி காதல் பாடல்களை காரில் சுழல விட்டிருந்தான் டிரைவர்.

திரும்பும்போது மோகனின் கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டுமே என்ற ஒரு விதமான கிலி வேறு...!

குலுவினுடைய குட்டி விமான நிலையம்தான். விமானம் வந்து விட்டது என்ற அறிவிப்பில் இவளது படபடப்பு கூடியது.

அவனை எப்படி வரவேற்பது?

இயல்பாய் பேசிச் சிரிக்கக் கூடுமா?

ஜோடிக் கிளிகளாய் உரசிக் கொண்டே வந்த சில தேனிலவு தம்பதிகளுக்குப் பின்னே வந்த மோகனை, அப்போதுதான் சந்திப்பது போல பார்த்தாள்.

இதுவரை உறைக்காத அவனது வயது இப்போது முகத்தில் உறைத்தது!

தோள் சரிந்து, வயிறு சற்று முன்னே, தள்ளி, சொட்டைத் தலையுடன் தளர்வாய் வந்தவனைப் பார்க்க பரிதாபமாய் தோன்றியதேத் தவிர, பரவசமாய்... ஏன் பாசமாய் கூட இல்லை!



''என்னாச்சு பவி? உம் முகம் சரியில்லையே?'' ஆம்... இதுதான் மோகன்!

15 வருஷங்களாய் இவளை அறிந்ததால் இவளது மனமாற்றம், ஏன் சிறு முகமாற்றத்தைக் கூட யூகித்து விடுபவன்!

''உங்க பிரயாணம் சௌகர்யமாய் இருந்ததா?''

''ம்ம்... உன்னிடமிருந்து கடிதமோ, போனோ வரலையே?''

ஓ...? அப்படித்தான் மாற்றத்தைக் கண்டு கொண் டானோ?

''வந்ததுமே உங்களுக்கு எழுதினேனே?''

''ஒரே கடிதம்... அதற்குப் பிறகு சத்தமே காணுமே... அல்லது என்னையே மறக்கடிக்கும் ஆற்றல் மணாலிக்கு இருக்குதா?''

இவளுக்குள் 'சுருக்'கென்றது!

மணாலியில் கண்ட ஒருவன் தன்னை சித்தம் கலங்க வைத்து விட்டான் என்பதை எப்படி ஒத்துக் கொள்வது?

இதுவரை மோகனே தனக்கு வாழ்க்கைக்கான துணை என்றிருந்தவள்.

'பழையன கழித்து புதியன புகுதலாய் பாண்டியனிடம் மயங்கியது... கேவலமாய் கூட பட்டது!

இப்படி நாணலாய் வளையக்கூடியதா தன் மனம்?

இல்லை... இதுவரை அதில் வேறு யாரும் பதியவில்லை...

முதன் முதலாய் பிடிப்பு தோன்றியிருப்பது பாண்டியனிடம் தான். அப்படியானால் இதுவரை கல்யாணமின்றி தனியே நிற்கும் மோகனின் கதி?

வரவேற்பறையில் ஆர்ப்பாட்டமான ஒரு புதுக்குரல் கேட்கவே அடுப்பை அணைத்துவிட்டு வரவேற்பறையை எட்டிப் பார்த்தாள் பவித்ரா.

"வாம்மா வா... என்ன அங்கேயே நின்னு வெட்கப்படறே?" தான்தான் இந்த வீட்டிற்குப் புதியவள் என்பது உணராமல் இவளை தடபுடலாய் வரவேற்றது பாண்டியனின் அத்தை!

"வாங்க..." மரியாதைக்கு வரவேற்றாள்.

"உம் முகத்துல அந்தக் களை வந்தாச்சம்மா... கல்யாணக் களைங்கறது இப்படித்தான் - எங்கே, எப்படின்னு நாம யோசிக்கும் முன்னே பொண்ணுங்க முகத்திலே மின்னும்!"

"என்ன சொல்றாங்க?" என்பதாய் இவள் கமலியைப் பார்த்தாள்.

"இந்தாம்மா பிடி - உனக்கு என் கல்யாண பரிசு." என்றபடி அகண்ட தட்டை எடுத்து நீட்டினாள் அத்தையம்மா.

வயதில் பெரியவள் நீட்டுவதை மறுக்க இயலாமல் இவளும் கை நீட்டினாள்.

அதன் நடுவே மரகதப் பச்சையில் கிரேப் சேலை ஒன்று இருந்தது. சேட்டின் கடையில் இவர்களும் பார்த்ததுதான்.

இதமான நிறம், நுணுக்கமான வேலைப்பாடு என்று இவள் மனதுள் ரசித்திருந்த சேலை அது.

திரட்சியான மாதுளைகள், முந்திரி, வடநாட்டு இனிப்புகள் அதைச் சுற்றிலும் காவல் போல இருந்தன.

"இதெல்லாம் எதற்குங்க?"

"மாப்பிள்ளை உன்னை அழைச்சுட்டுப் போக வந்திருக்காரே அதற்குத்தான்" என்று உரக்க சொல்லிய



அத்தை, பின் குரலைத் தழைத்து "வெளியே பேப்பர் வாசிச்சபடி இருக்கும்... அந்தத் தம்பிதானே?" கேட்டார்.

இரு இளைய பெண்களிடமிருந்தும் பதில் வராது இருந்தும் பேச்சு தொடர்ந்தது.

"அடக்கமான பிள்ளையாய் தெரியறார். அதுதானே முக்கியம். எங்க லலிக்கும் பாண்டியனோடு கல்யாண நாள் குறிக்கத்தானே நானும் வந்தேன்? மாப்பிள்ளைக்கு உடம்பு தேறணும்னு எங்கண்ணி பாண்டியை இங்கே அழைச்சு வந்தது. சரி, இப்படி விட்டுட்டுப் போயிட்டா? ஆம்பிள்ளைகளுக்கு உடம்பு முடியாத இருக்கையில்தானே பெண்டுகளின் துணை தேவை? இல்லைன்னா அநாவசியமாய் மனசு அலை பாயும்... அதான் லலி பேபியோடு வந்துட்டேன். கூடவே இருந்து மாப்பிள்ளை முழுக்க தேறினதும் கூட்டிப் போகன்னு வந்தோம்... ஆனா வீட்ல பேபியின் பிறந்த நாளப்ப பத்து பேரைக் கூட்டினதும் வீடே களைகட்டிடுச்சுல்ல? சரியான துணை சேரத்தானே வாழ்க்கையிலும் களைகட்டும்?"

இது வெறுமே மகிழ்வைப் பகிரும் பேச்சல்ல.

ஏறக்குறைய ஒரு எச்சரிப்பு.

உனக்காக வந்திருப்பவனோடு நீ கிளம்பு.

என் மாப்பிள்ளையின் மனதை அலைக்கழிக்காதே என்ற விரல் உயர்த்தல்!

அதோடு விடாமல் கிளம்பியவள், வெளியே இருந்த மோகனிடமும் "சட்புட்டுனு கல்யாண தேதியை முடிவு பண்ணுங்க தம்பி. தேதம் ஆன கையோட கல்யாணமான்னு தயங்காதீங்க... எப்பேர்ப்பட்ட துக்கத்தையும் கல்யாணம் ஆற்றிடும் - வரட்டா?"

என்றே விடைபெற்றாள்!

ஆனால் இவளுக்கோ கல்யாணம் என்ற வார்த்தையே இப்போது கசந்தது... கத்தி போல கழுத்தை அழுத்தி மிரட்டியது!

## 14

''ஜாக்கிங்கில் உள்ள இந்த காயத்ரி தேவி கோயில் ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கட்டப்பட்டது. சதுர கல்லும் மண்ணுமாய் கலந்த இதுபோன்ற கட்டுமானத்தை உலகின் வேறு எங்கும் காண முடியாது நீங்கள்.''

குழுமியிருந்த பயணிகள் குழுவிடம் விளக்கிக் கொண்டிருந்தார் ஒரு 'கைட்.'

ஒற்றைச் சர பூமாலைகளை சிறு மூங்கில் தட்டில் வைத்து விற்றுக் கொண்டிருந்தாள் ஒரு மூதாட்டி.

கூட்டத்தை விட்டு விலகி படிகளின் ஓரமாய் அமர்ந்தவன் கை காட்ட, இவளும் அருகே அமர்ந்தாள்.

ஆனால் இன்னுமே நம்ப முடியவில்லை.

எதற்காக அவன் அழைத்ததும் கன்று போல அவனைத் தொடர்ந்து வந்தாள்?

''நன்றி பவி... கூப்பிட்டதும் பிகு பண்ணாது என்னோடு வந்ததற்கு.'' இவனை மறுபடி எப்போது பார்ப்போம், பேசுவோம் என்று காத்தல்லவா கிடந்தாள்!

நதிக்கரையில் அமர்ந்து ஏக்கமாய் அவனது வீட்டைப் பார்த்த சில நிமிடங்களிலேயே அவன் அவளருகே வந்து விட்டான். அழைத்த அவன் தொனியின் அவசரத்திற்கு ஈடு கொடுத்து இவளும் அப்படியே அவனது காரிலேறி விட்டாள்.



''வந்திட்டேன்... ஆனா இது தப்போன்னு உறுத்துது...''

''ஏன் பவி?''

அத்தையம்மாளின் செல்ல மிரட்டலை இவனிடம் சொல்லலாமா?

''இல்ல... உங்க அத்தைப் பெண் லலிதா இவ்வளவு தூரம் உங்களுக்காய் வந்திருக்கும் போது...''

''அவளுக்கு இது விடுமுறை சமயம்... அதான்.''

''உங்க அத்தை நேற்று கமலி வீட்டுக்கு வந்து... உங்க லலியோடு உங்க கல்யாணத்தைப் பற்றி பேசினாங்க...''

''அது உன்னை விரட்ட... மனசைக் கலைக்க... மோகனும்தான் உனக்காக மணாலி வந்திருக்கார்... ஆனால் எனக்கெந்த சந்தேகமுமில்லை... யாரும் நம்மைப் பிரிக்க முடியாது பவி... ஏய்.. என்ன அப்படி பார்க்கறே?''

''இந்தளவு உங்களுக்கு என் மேல்... ஏன்... எதனால்?''

தடுமாறினாள்.

இந்தத் தயக்கமும் வெட்கமும் அவளுக்கு ஆபரணங்களாகி அழகு சேர்த்தன.

''உனக்கு என் மேல் ஈர்ப்பு வரலைன்னு சொல்ல முடியுமா?''

தலை கவிழ்ந்தாள்.

''அதைவிட பல மடங்கு ஆசை எனக்கு உன் மேல் பவி... நேசத்திற்கு சில சமயம் வெறுப்பிற்கும் கூட காரணங் காட்ட முடியாது... இருந்தாலும் சில காரணங்களை அன்னைக்கு உன்னிடம் சொன்னதாய் ஞாபகம்...''

முறுவலித்தான்.

''இது... எதிலே முடியும்னு.''

''ஏன்? கல்யாணத்தில்தான்.''

திடுக்கிட்டு நிமிர்ந்தவளின் உதடுகள் துடித்தன.

''கல்... யாணமா?''

''நம் நாட்டில் காலமெல்லாம் ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ அதுதானே ஒரே வழி?''

குறும்பாய் சிரித்தவனின் பற்கள் மாலை நேர வெயிலில் மின்னின.

''இங்கேயே நாம மாலை மாற்றிட்டால் கூட போதும்.''

''என்ன இப்படி பொறுப்பில்லாம பேசறீங்க?''

செல்லமாய் அதட்டினாள்.

''எனக்கு 29 வயசு நிறையப் போகுது. இதுவரை கல்யாணத்தைப் பற்றியே நினைக்காத நான் இப்ப... இப்படி அவசரப்படறேன்! இதுவரை படிப்பு, வியாபாரம்னே நாட்கள் போச்சு... அப்பா, அம்மா நாலு வருஷமாகவே 'பெண்டாட்டி' பேச்சை எடுத்திட்டுதான் இருந்தாங்க.''

''அவங்க சம்மதம்... கிடைக்குமா? விரலுக்கு ஏற்ற வீக்கம்னுவாங்க...''

''மோகன் உனக்கு ஏற்றவர்னு நினைக்கறியா பவி? உங்களைப் பார்த்தால் அப்பா, பெண் போலிருக்குது!''

''அவரை... எப்போ, எங்கே பார்த்தீங்க?''



''அவரை விமான நிலையத்தில், வந்திறங்கியதுமே பார்த்துட்டேன்! தவிர அவரைக் கண்டதும் உன் முகத்தில் ஏறின மிரட்சியையும் பார்த்தேன்.

நீ அவரை விரும்பலை... என்னையும் விரும்பலைன்னாலும் சொல்லு. ஆனா... அப்ப கூட என்னால் உன்னை விட்டு, விலக முடியாது பவி...''

அவன் குரல் குழைந்து கெஞ்சியது. இவள் குலுங்கவில்லை, குமுறவில்லை... ஆனால் மௌனமாய் கண்ணீர் வழிந்தது!

''ப்ளீஸ் பவி. இன்னுமொரு பியாலை உருவாக்க முயலாதே.''

அவளையும் மீறியது புன்னகை!

''ஒத்துக்கறேன்... இனம் புரியாத ஒரு பரஸ்பர ஈர்ப்பு நமக்கு நேர்ந்தது. உண்மைதான்ங்க... ஆனால் பெரியவங்க அதை ஒத்துக்கணுமே - அவங்களுக்கு அந்தஸ்து முக்கியம்...''

''எங்கப்பா அம்மா மனமொத்த தம்பதிகள். அன்பை உணர்ந்தவங்க தன் பிள்ளைகள் வாழ்வும் அது போலத்தானே ரம்யமாய் அமையணும்னு நினைப்பாங்க - ஆக நீ பயப்படாதே பவி... என்னை நம்பு..''

நிமிர்ந்து அவனது பொறுப்பும் கனிவுமான முகத்தைப் பார்த்தவளில் நம்பிக்கை சுரந்தது.

அந்த நம்பிக்கை அவளது உதடுகளைப் புன்னகையால் வளைவாக்கியது.

''மறுபடி நன்றி பவி...'' என்றவன் அவளது கைகளைப் பூவாய் ஏந்தினான்... மனம் கனிந்த பின் நேர்ந்த அந்த முதல் ஸ்பரிசம் அவளை புல்லரிக்க வைத்தது.

அவளது உள்ளங்கைகளைப் பிரித்து அழகு பார்த்தவன், 'இதில் என் வாழ்வை ஒப்படைக்கிறேன்' என்பது போல மிருதுவாய் குனிந்து முத்தமிட, அவளுக்குச் சிலிர்த்தது.

அந்த சந்திப்பின் மொத்த தித்திப்பையும் அழிப்பதற்கென்றே போல வீட்டில் இவளுக்காய் காத்திருந்தான் மோகன்!

''உன்னைக் காணாமல் கொஞ்சம் பயந்துட்டோம் பவி... எங்கே போயிருந்தே?'' - சமாளிக்க பேச்சு தந்தாள் கமலி.

மோகன் ஏதும் பேசவில்லை.

அவன் முகத்தை இத்தனை கோப கொடூரத்துடன் இவள் இதுவரை பார்த்ததுமில்லை.

ஆனாலும் பொய் சொல்ல மனமின்றி -

''பாண்டியன் கோயில் வரை கூப்பிட்டார்... நானும் அதைப் பார்த்ததில்லைன்னு போனேன்...''

''எது காயத்ரி தேவி கோயிலா - நாங்களே உன்னைக் கூட்டிப் போறதாய்தான் இருந்தோம்... நாளை நாகர் அரண்மனைக்குப் போகலாமா பவித்ரா? மோகன், நீங்களும் பார்க்க வேண்டிய இடமது...''

உற்சாகமாய் பேச முயற்சித்தான் சந்தோஷ்.

''பல நூற்றாண்டுகளுக்கு முன்பு உருவான, அற்புத இடங்கள்...''

கமலியும் ஒத்துப் பாடினாள்.

மோகன் எதற்கும் இளகவில்லை.

''பவி, உன்னோடு நான் தனியாய் பேசணும்...''



என்றபடி ஒரு அறைக்குள் நுழைந்தவனை, வேறு வழியின்றி தொடர்ந்தவளை கமலியின் பரிதாபப் பார்வைத் தொடர்ந்தது!

## 15

படுக்கை அறையின் கதவு தட்டப்பட்டது.

மறுபடி மோகனைப் பார்க்க, அவன் 'பேச்சைக் கேட்க திராணி அற்று கட்டையாகப் படுத்திருந்தாள் பவித்ரா.

''பவி, நான்தான் - கதவைத் திறயேன்.''

கேட்டது கமலியின் குரல்!

அவசரமாய் எழுந்து தாழ் நீக்கினாள்.

''ஏதும் சாப்பிடலையே பவி... இந்தப் பாலையாவது குடியேன்.''

அது தேவைதான் என்று பட வாங்கிப் பருகினாள்.

இரு பெண்களும் வாகாய் தலையணையை வைத்து அதில் சாய்ந்தனர்.

''என்ன சொன்னார் மோகன்?''

''பதினைந்து வருஷமாய் தெரிஞ்ச என்னை ஒதுக்கிட்டு பத்து நாளாய் கூட தெரியாத புதியவனோடு என்ன குலாவல்ன்னார்... உண்மைதானே?''

உணர்ச்சியற்ற குரலில் சொன்னாள்.

''வேறென்ன?''

''இது வயசுக் கோளாறாம்!'' கசந்த புன்னகைக் கசிந்தது

''உன்னைப் பற்றிப் புரியாத பேச்சு - விடு. உன் பின்னால் எத்தனை பசங்க, அதிலும் பெரும்புள்ளிகளின் பையன்ங்க சுத்தினாங்க...? நீ யாரையும் திரும்பியும் பார்த்ததில்லையே... நம்ப கல்லூரி பாட்டுப் போட்டிக்கு நீதிபதியாய் வந்த டிரம்மர் பாலு நன்றி நவின்ற உன்னில் சொக்கி ஒரு வருஷமாய் தூது விட்டானே...''

''என் மனதில் அப்ப சலனமேயில்லை கமலி... பாண்டியனிடம் ஏன் இப்படி தடுமாறி குப்புறக் கவிழ்ந்தேன்னு எனக்கேப் புரியலை. முக்கியமாய், அவர் என்னிடம் ஏனிப்படி உருகணும்ங்கறது நிஜமாகவேப் புரியலை! இதான் கடவுள் சித்தம்ங்கறதோன்னு தேறினேன்... ஆனாலும் மறுபடி பயம்மா இருக்குது...''

''எனக்கு இப்பதான் சந்தோஷமாய் இருக்குது. பவி - அதாவது நீ மோகனைக் கல்யாணம் செய்யப் போற தில்லைங்கற நிம்மதின்னு வை... என்னவோ அவரை முன்பிருந்தே எனக்குப் பிடிக்கலை... ஏதோ ஒரு நெருடல்...''

''அவர் வயசா?''

''இப்படியும் ஒரு நல்லவரா? தியாக மனமுள்ள ஜீவனான்ற மாதிரி சாந்த சொரூபியாய் மோகன் தன்னைக் காட்டிக் கொண்டாலும்... அது ஒரு வேஷம்... அதன் கீழ் அவருக்கு வேற ஒரு குணம்னு தோணிட்டே இருந்தது...''

''இன்னைக்கு அவர் கண்களைப் பார்த்ததும் நான் நடுங்கிட்டேன் கமலி... இத்தனை வருஷங்களில் இப்படி கொடூரமாய் அதை நான் பார்த்ததில்லை... ஏதோ ஒரு வெறி உள்ளே கனன்றதால்தானே கண்கள் அப்படி கங்காய் எரியும்? எனக்குமே இதுவரை மோகனைச் சரியாய், முழுசாய் புரிஞ்சுக்கலையோங்கற சந்தேகம்... முதல் முறையாய்...''



''தப்பினாய்ன்னு நிம்மதியாயிரு...''

''முடியலையே கமலி...''

''பாண்டியன் உன்னைக் கல்யாணம் செய்துக்கறேன்னு தானே சொன்னார்?''

''ஆனால் அவர் வீட்டுப் பெரியவங்க என் அப்பாவைப் பற்றித் தெரிஞ்சா சம்மதிப்பாங்களா?''

''இதையும் மறுபடி மோகன் உன்னிடம் சொல்லி பயங்காட்டினாரா?''

''ம்ம்... அப்புறம்...''

''சொல்லு... வேறென்ன கதை விட்டார்?''

''பாண்டியன் உன் பின்னால் சுத்தறதின் காரணம் என்ன தெரியுமா?

'பத்தே நாட்களில் ஒரு அழகிய பெண்ணை மயக்கி என்னைக் கல்யாணமே பண்ணிக்க சம்மதிக்க வச்சிட்டேன்'னு பீற்றிக்கத்தான்னு...! இதெல்லாம் ஒரு நாடகம் - நீயும் அவன் வலையில் விழுந்து பலியாயிட்டே.. உடம்பைத் தேற்ற மணாலி வந்த பாண்டியன் தன் கர்வத்தையும் தேற்றி புஷ்டியாக்கிட்டார்... இனி சொல்லாமலே ஊரைப் பார்த்து போயிடுவார் பாருன்னு...''

''அசடு... இதை எல்லாம் நம்பி நீ அழத் தயாராகிட்டியா?

ஷ்...''

தாய்மையுடன் தோழியைக் கட்டிக் கொண்டாள் கமலி.

அந்தப் பாசம் மிகத் தேவையாயிருந்தது அந்நேரம்.

''ஆமா, இந்த மோகனின் தொழில் என்ன?''

"இப்ப அப்பாவின் தொழிலில் பார்ட்னர்னு தெரியும்... அவருக்குத் தனியே ஏதேனும் தொழில் உண்டான்னு தெரியலை..."

சற்று யோசித்தே பதில் வந்தது.

"அவருடைய வீட்டிற்குப் போனதுண்டா?"

மறுபடி புருவம் சுருக்கி யோசித்தாள்.

"ஒரு முறை கூட இல்லை...! மோகனின் அப்பா அடிக்கடி எங்கப்பாவைப் பார்க்க வருவார்... அவர் இறந்த பிறகு மோகன் சதா எங்க வீட்டில்தான் இருப்பார்..."

"ஆக நீ நன்றியால் நெக்குருக வேண்டியதில்லை பவி... மோகன் உங்களுக்கு உதவியதை விட, உங்க உதவியை உறிஞ்சியிருக்கிறார் என்பதுதான் நிஜம்!"

அழுதுத் தொய்ய தயாராய் இருந்த பவித்ராவின் மனசு விக்கித்து நிமிர்ந்தது!

"இது நன்றி கெட்டத்தனமான நினைப்பாய் இருந்திடக் கூடாதே, கமலி..."

கமலி யோசனையில் அமிழ்ந்திருந்தாள்.

"நீக்கும் மோகனைப் பிடிக்காதுன்னு சொன்னேல்ல?"

"ம்ம்... வார்த்தையாய் சொன்னதில்லை... ஆனா அவங்க முகம் காட்டிக் கொடுத்திடும்."

"உன்னைத் திருமணம் செய்தால் உங்கப்பாவின் சொத்து மொத்தமும் தன்னுடையதாயிடும்னு மோகனின் நோக்கமாய் இருந்திருக்கனும்... இல்லைன்னா 35 வயசு வரை ஏன் பிரம்மச்சாரியாய் நிற்கனும்?"



"அப்பா இருந்திருந்தால் அவரின் ஆலோசனை, நோக்கமெல்லாம் கேட்டிருக்கலாம்..."

ஏக்கப் பெருமூச்சு ஒன்று வெளியேறியது மகளிடமிருந்து!

"அவருக்கு நிச்சயம் பாண்டியனைப் பிடிச்சிருக்கும்..."

"ஆனா மோகன் சொன்னதை எல்லாம் கேட்ட பிறகு, எனக்கு... நான்... பாண்டியனையே சந்தேகப்படறேன், கமலி.."

"என்ன சந்தேகம்?"

"சட்டுன்னு என் வாழ்வில் நுழைஞ்ச வேகத்திலேயே விட்டும் விலகிடுவாரோன்னு..."

"குழப்பிட்டான் உன்னை... ச்சே..."

வெளியே தொலைபேசி இனிமையாய் அழைத்தது.

'எடுக்கலையா?' என்பதாய் கமலியைப் பார்த்தாள்.

"இல்லை... சந்தோஷ் எடுப்பாரு..."

இரண்டாம் நிமிடம் சந்தோஷ் இவர்களிடமாய் வந்து அவசரப்படுத்தினான்.

"கமலி, பவியை போனை எடுக்கச் சொல்லு..."

"யாரு இந்த வேளையில்?"

"பாண்டியன் - மாடி இணைப்பிலேயே பேசச் சொல்லு..."

அவசரமாய் ஓடிய பவித்ராவின் முகம் திரும்பியபோது சுரத்தாயில்லை.

"என்னடா... பவி?'

இந்தப் பெண் இன்னும் எத்தனைச் சோதனைகளைத் தாங்க வேணுமோ என்ற பரிதவிப்போடு வினவினாள் கமலி.

"பா... பாண்டியன்தான்."

"ம்ம் - என்னவாம் - உடம்பு சரியில்லையா?"

"இல்லை - ஊருக்குப் போறாராம். அவங்கப்பாவிற்கு உடம்பு சுகமில்லையாம்."

"எப்ப கிளம்பறார்?"

"நாளை அதிகாலையில்..."

"எப்பத் திரும்புவாராம்?" கேட்ட கமலியின் குரலும் பிசிறடித்தது.

"சீக்கிரமேன்னார்! வந்து என்னை அழைச்சுப் போறேன்னார்... ஆனா மோகன் என்னை இங்கே விட்டு வைக்க மாட்டாரே? உடனே கிளம்பணும்னு நிக்கறார்."

"நீ பாண்டியனிடம் என்ன சொன்னே?"

"என்ன சொல்ல கமலி... ஒண்ணும் பேசலை. இப்படி மவுனமாய் இருந்தால் என்னை நம்பலைன்னுங்கிறார்... பாண்டியன் நம்பிக்கைதான் நேசத்தின் ஜீவன் என்பது புரியுது ஆனால்..."

"லலிதாவும் அவர் அத்தையும் இங்கேயிருக்காங்களா அல்லது...?"

"பாண்டியன் வீட்டில் இல்லாதபோது அவங்களுக்கு என்ன வேலை? ஆக அவங்களும் அவரோடு கிளம்பறாங்க..."

"ஆக இப்போது பாண்டிய விலாஸில் யாரும் இல்லை." இல்லை என்று தலையசைத்த பவித்ராவின் மனதில் நம்பிக்கை இல்லை என சொல்லி விட முடியாது. ஆனால்... குறைந்து கொண்டிருந்தது!



## 16

"இந்தா ஏன் உருண்டு உருண்டு படுத்து என் தூக்கத்தைக் கெடுக்கிற."

அரைத்தூக்கத்தில் முணுமுணுத்தான் சந்தோஷ்.

"தூக்கம் வரலேங்க."

"இப்படி உருண்டால் என் பிள்ளைக்குக் கஷ்டமாயிருக்கும். குட்டிப் பயல் நிம்மதியாய் தூங்க வேண்டாமா?"

"பவியிடம் பேசிட்டுத் திரும்பும்போது நீங்க தூங்கிட்டீங்க அதான் சொல்ல முடியலை."

சற்று உறக்கம் கலைய, கேட்டான்.

"என்ன."

"பாண்டியன் ஊருக்குக் கிளம்பறாராம் நாளை அதிகாலையில்."

"எங்கேயாம்?"

விவரங்களை சொன்னவள், "மோகன் சொன்னது போலவே ஆயிடுமோ? அதாவது சும்மா பொழுதை கழிக்க உன்னோட காதல் நாடகம் நடத்தினேன் என்று கிளம்பி விட்டால்...?"

முழு விழிப்பிற்கு வந்த சந்தோஷ் கட்டிலில் எழுந்து உட்கார்ந்தான் தலையணையை மடியில் வைத்துக் கொண்டவன்,

"பாண்டியனுக்கு வயசு 29. ஒரே பிள்ளை. தொழிலில் கெட்டிக்காரன். கௌரவமான குடும்பப் பின்னணி, அவன் இப்படி சின்னத்தனமாய் சில்மிஷம் பண்ணுவானா என்ன?"

"நீங்களே இதை பவியிடம் நாளை சொல்லிடுங்களேன். அவளுக்கும் ஆறுதலாயிருக்கும். அவளும் பாவம் கலங்கிப் போயிட்டா. எனக்கு ஒரு கவலை சந்தோஷ்...'

"காலையில் பேசுவோமா" கொட்டாவியை மென்றபடி சொன்னான்.

"நம்ப பவியைப் பார்த்து கல்யாண பேச்சை எடுத்ததுமே பாண்டியனுடைய அப்பாக்கு சுகமில்லைன்ற தகவல் வருது... இதை அபசகுனமாய் நினைச்சுடுவாங்களோ?"

"இது பாண்டியனிடம் கேட்க வேண்டிய கேள்வி" என்றவன் மறுபடி படுத்துக் கொண்டான்.

"ஆறுதலாய் நாலு வார்த்தை சொல்வீங்கன்னு பார்த்தால்..."

"இது கொஞ்சம் சிக்கலான விஷயம் கமலி. பவித்ராவே முடிவு எடுக்கட்டும். பாண்டியன் திரும்ப வரும் வரை பொறுப்போமே?"

"அதற்குள் மோகன் பவியை கூட்டிட்டுக் கிளம்பிட்டா?"

"உன் பவி பேபி இல்லையே... தூக்கிட்டா போக முடியும்? அவ சம்மதம் இன்றி எதுவும் நடக்காது. சும்மா படு."

நிலைமை இப்படி ஒரேயடியாக கட்டு மீறி போய் விடாது என்று பட தூங்க முயன்றாள் கமலி.

'ஒவ்வொரு கல்லாய்
நீரில் வீசினேன்.
மூழ்கி விட்டன என் கவலைகள்.'

பொடி கற்களை பியாஸில் எறிய எறிய, இவளுக்குள் ஒரு கவிதை உருக் கொண்டது.



இந்த நதிக்கரை ஒரு தாயின் மடி போன்றதுதான். அதில் சாய்ந்திருக்கும்போது கவலைகளை காணோம்...

ஆனால் விலகியதும் அவை மீண்டும் வந்து ஒட்டிக் கொள்கின்றனவே. தலை திருப்பி பாண்டிய விலாஸைப் பார்த்தாள்..

முன்பு இவளை குறும்புடன் பாண்டியனைப் போலவே சிமிட்டலாய் பார்த்த அவ்வீடு இப்போது இறுகி நின்றது. என்னில் இப்போது யாருமே இல்லை என்ற ஒருவித விரக்தி மவுனம். பியாஸின் சிற்றலைகள் இதமாய் பேசி இவளின் சஞ்சலத்தைக் குறைக்க முயன்றன.

நேற்றிரவு மறுபடி தொலைபேசியில் அழைப்பு வருமோ என்று கலவரமாய் காத்திருந்ததில், தூக்கம் இல்லை. இப்போது உறக்கத்தில் கண்கள் கனத்தன. ஆனாலும் தன்னை யாரோ பார்ப்பது போன்ற ஒரு குறுகுறுப்பு. ஒருவேளை பாண்டியன் இங்குதான் இருக்கிறாரோ? இந்த தவிப்பைக் கண்டு ரசிப்பதற்காக அவர் சொன்ன பொய்யா அது. காலடி ஓசை கேட்டது... ஆர்வமும் அச்சமுமாய் திருப்பிப் பார்த்தாள்.

பாண்டியனா என்ற ஆர்வம்.

அவர்தான் இங்கில்லையே... வேறு யார் இங்கே இந்நேரம் என்ற அச்சம்.

"நான்தான் பவி."

மோகனது சிரிப்பு வழக்கம் போல் இல்லை. இவள் எழ முயன்றாள்.

"உட்காரேன் என்ன அவசரம்?"

"இல்ல நேரமாச்சு."

''துணைக்குதான் நான் இருக்கேனே பிறகென்ன? நீ இங்குதான் இருப்பேன்னு தெரியும். பாண்டியன் கிளம்பிட்டாரேன்ற கவலை... கலக்கம்... ம்?''

கேள்வியுடன் அருகே அமர்ந்தவனிடம் இருந்து தப்புவது போல் எழுந்து நின்றாள்.

''என்னிடம் பேச மனம் இல்லையா பவி? மனசார பேசினால் உனக்கும் லேசாயிடும். உன் முகத்தில் சிரிப்பே யில்லையே?''

''உங்களுக்கு அவர் இங்கே இல்லாதது எப்படி தெரியும்?''

இந்த உஷாரான கேள்வியில் அவன் சற்று தடுமாறினான்.

''சந்தோஷ் சொன்னார். நீ அவர்களது பொறுப்புன்னு நினைப்பதால் கவலைப்படறாங்க.''

''பாண்டியன் சீக்கிரமே திரும்புவதாய் சொல்லிவிட்டுப் போனார்... ஆக என்ன கவலை?''

''ஆனா எனக்கு வருத்தமாயிருக்கு பவி. அப்படி என்ன அவசரம்ன்னு நேரில் வந்து சொல்லாமல் கிளம்பிட்டார். அதுவும் அவருடைய அத்தை, அவங்க மக எல்லாருமாய் கிளம்பறதுன்னு... ம்ப்ச்... இந்த வீடே சோகமாய் நிற்பது போலில்லை?''

தான் சற்று முன் நினைத்ததையே அல்லவா சொல்கிறான்! சில நிமிடங்கள் மௌனத்தில் கழிந்தன.

''அவங்க மணாலிக்கு திரும்புவாங்க என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை பவி.''

''அவருடைய அப்பா குணமானதும் வருவதாய் சொன்னார்.''



''சுகவீனமே ஆகாத அப்பா குணமாவது அத்தனை கஷ்டமா?'' நிற்க இயலாமல் குழைந்த அவளது கால்கள். என்ன சொல்கிறான்...?

இல்லை... இது இவளை குழப்புவதற்கான முயற்சி.

''பாண்டிய விலாஸின் மானேஜரிடம் பேச்சக் கொடுத்தேன். அத்தையம்மா தன்னிடம் சொன்னதை அவர் என் காதிலும் போட்டார்'' என்ன என்பதாய் அவனைப் பார்த்தாள்.

''தன் அண்ணன் போனில் தன்னிடம் உடனே பாண்டி யனை அழைத்து வரச் சொன்னாராம்... படுக்கையில் இருப்பவர் அப்படி பாசமாய் தங்கையிடம் உத்தரவிடுவாரா என்ன? அவசரமாய் வரச் சொன்னது மட்டும்தான் உண்மை. ஒருவேளை லலிதா பாண்டியனின் கல்யாண விஷயம் பேசுவதற்கோ...?''

எத்தனை சினிமாக்களில் பார்த்திருக்கிறாள்.

பெற்றவர் சாக கிடப்பதாய் தந்தி அனுப்பி மகனை வரவழைத்து. அவனை கல்யாண மனையில் உட்கார வைக்கும் யுக்தியை? ஆனால் இன்னுமா அந்த குயுக்திகள் கையாளப்படுகின்றன? மோகனது குரல் கனிவுடன் அவளுக்கு விளக்கியது.

''அப்படி செய்வானேன்னு யோசிக்கிறயா பவி? கோடிக்கணக்கான பணம் சம்பந்தப்படறதே. கூடவே அந்தஸ்தும்... ஆக அவற்றைக் காபந்து பண்ண இப்படி ஏதேனும் செய்துதானே தீரணும்?''

''அப்படின்னா... பாண்டியனின் அப்பா...?''

''சவுக்கியமா இருக்கிறார். உடனே மகனைக் கல்யாணக் கோலத்தில் பார்க்கணும்ன்ற ஆசை மட்டும்தான். அதை தன்

தங்கை மூலம் நிறைவேற்றிக் கொள்ளவும் அவருக்குத் தெரியும்."

"ஆனால் பாண்டியன் என்னை நேசிப்பதாய்...

"உலகம் அறியாத குழந்தை நீ பவி. உன்னை புத்திசாலின்னு நினைச்சேன். உலகம் சுற்றுவது காதலால் அல்ல. காசால்...!"

## 17

சப்பாத்தியைத் தேய்த்தபடி கேட்டாள்.

"ஏன் கமலி... நான் கிளம்பிடறேனே..? என்னால் உனக்குப் பிரச்னையோன்னு தோணுது..."

"ச்சே... என்னடா பவி... மணாலி அழைத்ததே உன் மனம் தேறட்டும்னு. எனக்கும் எத்தனையோ ஒத்தாசையாய் இருந்தேன்... ஆனா இங்கே எதிர்பாராமல் ஒரு புது முடிச்சு விழுந்திடுச்சு."

"இந்த முடிச்சால் இந்த ஊரில் உனக்கு ஏதேனும் தொந்தரவு நேருமோன்னு பயமாயிருக்கு."

ஒரு செல்ல சலிப்புடன் பவித்ராவை உலுக்கினாள் கமலி.

"யாரு மோகன் சொன்னா? பார், பவி, நாங்க குத்தகைக்கு எடுத்திருக்கும் விடுதி இது. ஒவ்வொரு வருடமும் அதைப் புதுப்பிக்கலாம். அல்லது மூட்டைய கட்டிட்டுக் கிளம்பிடலாம். கையில் திறமையிருந்தால் எங்கேயும் இதே வருமானம் வரும். தவிர எங்களை இங்குள்ளவர்கள் மிரட்டாற்பல நீ என்ன செய்திட்ட?"



தோழி சொன்னதின் உண்மை புரிய இவளது இறுக்கம் சற்று தளர்ந்தது.

மோகன் அநாவசிய குழப்பங்களை தன்னுள் விதைப்பது புரிந்தது.

ஆனால் அவன் சொன்ன ஒரு விஷயத்தில் உண்மை இருந்தது...

வேதனை தரும் உண்மை.

'சவுக்கும் வாழையும் பற்றி ஒரு உவமை சொல்வாங்க. வீடு கட்ட சவுக்கு மரசாரம் கட்டுவாங்க. ஆனால் கட்டி முடியவும் அதை அவிழ்த்து வீசி விட்டு வாழையை வீட்டின் முன் நிறுத்தி பால் காய்ச்சுவாங்க.'

மோகன் பரிதாபமாய் தோளைக் குலுக்கியபடி சொன்ன இவளை அழுந்த சுட்டது.

தன்னை நன்றி கெட்ட ஜென்மமாய் எண்ணி விட்டானே.

ஒரு துளி சப்ஜியை தொட்டு சுவைத்தவளுக்கு அதன் சுவையே உரைக்கவில்லை.

"இத கொஞ்சம் உப்பு பார் கமலி... நான் குளிச்சுட்டு வந்திடுறேன்."

வீட்டில் பெரியவர்கள் இருந்தால் அவர்களிடம் பிரச்னையை சொல்லி தெளிவு பெறலாம். அந்த பாக்கியம் இல்லை.

ஆக இந்த மகா முடிச்சுகளை எங்கிருந்து ஆரம்பித்து சிக்கலைப் பிரிப்பது... எப்படி தன்னை விடுவித்துக் கொள்வது?

கூந்தலைப் பிரித்துச் சீவி குளிக்கத் தோதாக கொண்டையிட்டாள். துவாலையை எடுத்த நேரம் கதவு தட்டப்பட்டது.

"யாரது?"

''விஜய் நீதி...''

'இது யார் புது பேராய் இருக்கிறதே?' திறந்த கதவின் வெளியே அசட்டுச் சிரிப்புடன் நின்றிருந்த சிறுவனை முன்பு அவள் பார்த்ததுண்டு. அவன் கையில் இருந்த கடித உறையைப் பார்த்ததும் மனம் புரிந்து படபடத்தது.

''நீ... 'பாண்டிய விலாஸில்'தானே வேலை பார்க்கிறே?''

பெரிதாய் தலையாட்டினவன் அவரிடம் அந்த கடித உறையை நீட்டினான்.

அதே வெளீர் ஊதாநிற உறை. இடது ஓரத்தில் தங்க மீனோடு, பாண்டிய விலாஸ் என்ற எழுத்துக்கள்.

''யார் கொடுத்தா?''

''சாப் தரச் சொன்னாங்க'' என்றபடி ஓடத் தயாரானான் பொடியன்.

''உங்க சாப் இங்கேயா இருக்கிறார்?'' உடைந்த இந்தியில் விசாரித்தாள். சற்று விழித்தவன் ''பெங்களூர் போயாச்சே'' என்று விட்ட ஓட்டமாய் கீழ் இறங்கினான்.

''பெங்களூருக்கா? அப்படியானால் பாண்டியன் சென்னைக்குப் போகவில்லையா? பெங்களூரில் அத்தையம்மாள் இருப்பது தெரியும். அவர்களோடு அங்கு போவதென்றால் தன்னிடம் சொன்னது பொய்யா?''

மோகன் சொன்னது போல பெரியவருக்கு சௌக்கிய குறைச்சல் இல்லை.

ஆக அதுவும் ஒரு பொய்! ஏன் இந்த பொய்கள்?

அதற்கான விளக்கங்களை இந்தக் கடிதத்தில் இருக்குமோ? நடுங்கும் விரல்கள் கவனமாய் உறையைப் பிரித்தன.



உள்ளேயிருந்த வெள்ளைத் தாள் பிரிப்பதற்குள் லேசாக வியர்த்தே விட்டது. ஏதோ பளுவைத் தூக்கிப் புரட்டியது போல் மூச்சு பெரிது பெரிதாய் இழைந்தது.

கடிதத்தின் வலது மூலையில் நேற்றைய தேதி.

அவசர கையெழுத்தில் ஆரம்பித்தது கடிதம்...

'என்னை மன்னித்து விடு பவி' என்று!

அந்த ஒற்றை வரியே இவளின் பாதி உயிரை கரைத்து விட்டது!

இரத்த ஓட்டம் நின்று உடம்பு குளிர... விழிகளை அடுத்த வரிக்கு நகர்த்தினாள்.

'உன்னிடம் பொய் சொல்லும்படி நேர்ந்து விட்டது...

உன்னை வருந்த விடக்கூடாது என்ற நோக்கமே காரணம். ஆனால் நம் காதல் பொய்யல்ல, பவித்ரா.

அதே சமயம் இத்தனை ஆண்டுகளாய் என்னைப் பாசமாய் வளர்த்தெடுத்த பெற்றவர்களையும் நான் ஒதுக்க முடியாதே...

அவர்களை... என் மொத்த உறவுகளையுமே ஒதுக்கி விட்டு உன்னோடு நான் வாழ்ந்தால்... அவ்வாழ்வு மகிழ்வும் நிறைவுமாய் அமையுமா என்பது சந்தேகம்தான்...

ஆயிரங் காலத்துப் பயிரை முறைப்படி பயிர் செய்வதே சரி என்று படுகின்றது...

உன்னை என்னால் முழுக்க மறக்க முடியாது பவி...

அழகிய நினைவுகளை யாருக்காகவும், யாராலும் அழிக்க முடியாதில்லையா?

அவை நமக்கே நமக்கு...

- பாண்டியன்.

அவளது முழு உடம்பும் சில்லிட்டிருந்தது.

கட்டிலுக்குப் போய் படுத்தது கூட எப்படி என்று அறிந்தாளில்லை.

தொய்ந்த கரங்களில் பிடித்து, மறுபடி கடிதத்தை வாசித்தாள். கடைசியில் அவர்களது நதிக்கரையில் முகிழ்த்த நேசத்திற்கு இது மட்டுமே ஞாபகார்த்தம்!

கனவு போன்ற நினைவுகளும்,

'நாம் பிரிந்து விடலாம் பவி' எனும் இந்தக் கடிதமும்! அவசரத்தில் கிறுக்கப்பட்டது போன்ற அந்த எழுத்துக்களை, எழுதியவனைப் போல எண்ணி ஏக்கமாய் பார்த்தாள்...

சில நாட்களின் பழக்கம் தன்னை இப்படி நொறுக்கக் கூடுமா?

தன்னில் இப்படி ஒரு காதல் பொறியை ஊதி ஊதி வளர்த்தவன் இப்படி பனிநீரை அதில் கொட்டிவிட்டு ஓடுவது ஏன்?

மோகன் யூகித்தது போல இது பாண்டியனுக்குச் சவாலான ஒரு விளையாட்டா?

பொழுது நகராத நாட்களில் உருட்டி விளையாடும் பகடைக் காய்தானா தான்?

## 18

'ஜாக்லைன்ஸ்' நிறுவனத்தின் மிகச் சிறு விமானம் அது.

பன்னிரண்டு பேரே அமரக்கூடிய அமைப்பு. இருபுறமும் ஒற்றை இருக்கைகள் - நடுவே ஒடுங்கிய இடைவெளி.



புன்னகையுடன் குனிந்து இவளிடம் ஒரு தட்டை நீட்டினாள், விமானப் பணிப்பெண்.

"வேண்டாம் - நன்றி."

"இனிப்பை வாயிலிட்டால் உமிழ்நீர் சுரப்பில் உங்கள் காது பத்திரமாயிருக்கும். தலையும் சுற்றாது. தவிர இந்தப் பஞ்சை காதில் வைக்காவிட்டால் இந்த 45 நிமிடப் பயணத்தில் உங்கள் காது சற்று மந்தமாகும் அபாயம் உண்டு."

புன்னகை மாறாமல் எச்சரித்தாள் அப்பெண்மணி. ஆக பவித்ரா பஞ்சை காதுகளில் அடைத்து இனிப்பை வாயி விட்டாள்.

அது கசப்பாய் உள்ளிறங்கியது!

பிரியமான சிநேகிதியை அவளது வாஞ்சையான கணவனைப் பிரியும் வருத்தம், இப்படி திடும்மென கிளம்ப நேர்ந்ததில் சஞ்சலம், தன்னிடம் கூட சொல்லாமல் இவள் கிளம்பியதை மோகன் எப்படி எடுத்துக் கொள்வானோ என்ற கலவர பயம்... பாண்டியன் கற்றுத் தந்த காதல் பாடம்... அதன் ஏமாற்ற வலி...

எல்லாமுமாய் அவளைப் பிழிந்தெடுத்தன.

இரைச்சலுடன் கிளம்பியது விமானம்.

பாண்டியனின் கடிதத்தைப் பற்றி சொல்லி இவள் அழ, கமலியும் சந்தோஷும் திகைத்து விட்டார்கள்.

'பெரிய இடத்து சகவாசத்தில் கவனமாய் இருக்கணும்னு சொல்றது இதனால்தான் போல... விவரம் அறியாமல் சகதியில் இறங்கிட்டோமே?'

''எனக்குத் தனியாய் இருக்கனும் கமலி... மோகனை பார்க்கத் திராணியில்லை... எனக்குத் தாங்காது...''

''புரியுது பவி... இந்த வேதனையை அவர் கூட்டுவார்... உள்ளே இறங்கிய கத்தியைத் திருகுவது போல...''

''உடனே கிளம்ப ஏற்பாடு பண்றேம்மா... நீ தைரியமாய் இரு.'' என்ற சந்தோஷ், சந்தடியின்றி இவளைக் குலு கூட்டி வந்து விமானத்திலும் ஏற்றி விட்டான்.

டெல்லியிலிருந்து சென்னைக்கான ரயில் டிக்கெட்டும் தயார். இனி சென்னை வெயிலில் வறுபட்டு, கிடைக்கும் ஏதோ ஒரு வேலையில் தன்னை அமிழ்த்தி, இதையெல்லாம் மறக்க முயற்சிக்கனும்.

அப்பாவின் மரண துக்கத்தை ஆற்ற வந்தவள் -

இப்போது புது ரணத்துடன், வேதனையுடன் திரும்புகிறாள்.

இதை விதியின் விளையாட்டு என்பதா.

அல்லது தன் மதிகெட்டத்தனமா?

பாண்டியனைப் பார்த்ததிலிருந்து தன் மதி வேலை பார்க்க மறுத்து விட்டதே!

அவளது உணர்வுகள் தானே குதியாட்டம் போட்டன?

பழக்குலை கண்ட மந்தி போல அவன்பால் பாய்ந்து... ச்சே இப்போது அவமானப்பட்டு திரும்பும் நிலை.

சென்னைக்கான ரயில் பயணத்தில் பவித்ரா யாருடனும் பேசவில்லை. தன் ஈரக் கன்னங்களை யாரும் பார்த்து விடக்கூடாதென்றே ஒரு அகன்ற பத்திரிகையின் பின்னே மறைந்து கொண்டாள்... அந்த ஒன்றரை நாளும் பானங்களைத் தவிர வேறேதும் தொண்டையில் இறங்கவில்லை.



அவள் நெஞ்சின் ரணம்தான் அவளையேத் தின்று கொண்டிருந்ததே...

நந்தினியை அவள் ரயில் நிலையத்தில் எதிர்பார்க்க வில்லை.

பவித்ராவின் தோழி நந்தினியும் இவளை இப்படி ஒரு கோலத்தில் எதிர்பார்க்கவில்லை என்பதை அதிர்ந்த அவளது விழிகளே காட்டி விட்டன!

''என்ன பவித்ரா, ரயில்ல தூங்கலை - சாப்பிடலையா? முதல்ல பெட்டியைத் தா...''

''நந்தினி... நீ எப்படி இங்கே?''

திகைத்துக் கேட்டாலும் பழகிய முகத்தைக் காண ஆறுதலாயும் இருந்தது.

''கமலி போன் செய்து, நீ இதில் வருவதாய் தெரிவிச்சா.

என் விடுதியில் உனக்கு ஒரு அறை ஒதுக்கியிருக்கேன் - வா போகலாம்.''

''நன்றி நந்தினி - மணாலியிலிருந்து கிளம்பிய அவசரத்தில் உன் தொலைபேசி எண்ணைக் கூட எடுத்துக்கலை... நேரே கீழ்ப்பாக்கத்திற்கு வருவதாய்தான் இருந்தேன்.''

இந்த கோலத்தில் நீ வரப் பொருத்தமான இடம்தான் என்று மனதுள் நினைத்தாலும் நந்தினி அதைச் சொல்லவில்லை. ஜோக்கடிக்கும் சந்தர்ப்பம் இதுவல்ல என்று புரிந்திருந்தது.

நந்தினியின் வீடு செழிப்பானது. ஆனால் தந்தை ஒரு விபத்தில் இறந்து விட, தங்களது பெரிய வீட்டையே பகுதிகளாய் பிரித்து அதை வேலையிலுள்ள பெண்களுக்கான விடுதியாய் மாற்றி விட்டாள். அவளது தாய் அவர்களுக்கான

உணவை கவனிக்க, ஏறக்குறைய 20 பெண்கள் அங்கு தங்கியிருந்தனர். பெரும்பாலோர் அரசு மருத்துவமனையில் பயிற்சி பெறும் பெண் மருத்துவர்கள்.

கமலியின் மூலமாகவே நந்தினி பரிச்சயம் என்றாலும் நல்ல சிநேகிதி. சிறு அறையில் இவளது பெட்டியை வைத்ததும் பரிவுடன் கேட்டாள்.

''என்னாச்சு பவித்ரா?''

''இப்படி கேட்காத இடமாய் தேடிட்டு வந்தேன்... நாளாகட்டுமே?''

''சரி வேணாம்... அம்மாவும் ஏதும் கேட்கக் கூடாதுன்னு சொல்லிடறேன். முதல்ல குளி - சாப்பாட்டை இங்கேயே எடுத்து வரேன் - பிறகு தூங்கு.''

குளித்து, வயிறும் நிரம்ப, அதுவரை அவள் விலக்கி வைத்திருந்த உறக்கம் அவளைப் பாய்ந்து வந்து இறுக்கியது.

'ஏன், எனக்கு இப்படி ஏன் ஆனது...? இனி என்ன?' என்ற புலம்பல்களை எல்லாம் மறக்கடித்த தூக்கம்...

விழித்தது மறுநாள் காலைதான்...

14 மணி நேர ஓய்விற்குப் பின்புதான்...

தட்டிப்பட்ட கதவைத் திறந்தாள்.

''ஒரு வழியாய் எழுந்தியா? நல்லது... முகம் தெளிஞ்சிருக்கு... உனக்கு ஒரு 'பேசி' அழைப்பு வந்தது பவி... அரை மணி நேரங் கழித்து கூப்பிடுங்கன்னேன்...''

''யார் கமலியா?''

''அவ நேத்திரவே கூப்பிட்டு நீ பத்திரமாய் வந்து சேர்ந்தியான்னு விசாரிச்சட்டா.''



அப்படி என்றால் இது யார்?

சற்றுத் தெளிந்த மனசுக்குள் மறுபடி பய அலைகள் திரண்டன!

மோகனா? இவளைத் தொடர்ந்து சென்னைக்கே வந்து விட்டானோ? விமானத்தில் வர, மூன்றே மணி நேரப் பயணம்தானே?

கமலியைக் கெஞ்சி தான் இருக்கும் இடத்தைக் கேட்டறிந்து...

''ஏதோ பாண்டியன்னு சொன்னார்...''

இவளுக்குள் சுழற்காற்றே அடித்தது!

இங்கும் தன்னைப் பந்தாடப் போகிறார்களா?

'என்ன பவி? ஏதேனும் பிரச்சினையா? உனக்கு அவரைப் பார்க்க விருப்பம் இல்லைன்னா சொல்லிடு. வருபவரை திருப்பி அனுப்பிடலாம்.''

''போன் தானே வரும்னே?''

பதட்டத்தை மறைத்து மெல்ல வினவினாள்.

''போன் பண்றேன் அல்லது நேரில் வரேன் என்றார்.''

ஆக கமலி நந்தினியிடம் பாண்டியனைப் பற்றி விலாவாரியாக அளந்துவிடவில்லை. தகப்பனை இழந்த துக்கத்தில் இருந்து தான் மீளவில்லை என்பதால் ஏதோ சொல்லியிருக்கக் கூடும். விவரம் அறியாத நந்தினியும் பாண்டியனை வரச் சொல்லி விட்டாள். சரி... பாண்டியனுக்கு தான் இங்கிருப்பதை யார் சொன்னது? கமலியைத் தவிர யாருக்கும் தெரியாதே?

''அவர் பெரிய மனுஷ தோரணையில் பேசினதால் எனக்கு மறந்துப் பேசத் தோணலை. ஏன் உனக்கு...''

''யாரையும் சந்திக்கும் மனநிலை எனக்கு இல்லை நந்தினி.''

''அவ்வளவுதானே வருபவர் கவர்னரா இருந்தாலும் திருப்பி அனுப்பிடலாம்.''

குழலை சற்று கலகலப்பாக்க முயற்சித்த நந்தினி பிளாஸ்கில் இருந்த காபியை ஊற்றி நீட்டினாள்.

இதுவரை தேநீரின் நளினமான நறுமணத்திற்கு பழகியிருந்த அவளது நாசிக்கு இந்த உக்கிர வாசனை அத்தனை ரம்மியமாய் இல்லை. ஆனாலும் சூடான பானத்தைப் பருகினாள்.

புலன்கள் சட்டென சுறுசுறுப்பாயின. குளித்து சேலையை சுற்றிக் கொண்டு முதலில் போய் நந்தினியின் தாயாரைப் பார்க்க வேண்டும் அல்லது மரியாதையாய் இருக்காது.

சிறு ஒப்பனையால் முகத்தைப் பொலிவாக, மகிழ்வாகக் காட்ட முயன்றவள் படியிறங்கினாள்.

முன்பே சில முறை இந்த விடுதிக்கு வந்ததுண்டு. நந்தினியின் தாயாரின் அறை கீழே சமையலறையை ஒட்டி இருக்கும்.

படியருகே இருந்த நீள கண்ணாடி ஜன்னலின் வழியே இந்த விடுதி வளாகத்துள் நுழைந்த கருநீல பென்ஸை பார்த்தவளின் உள்ளே மறுபடி ஒரு தடுமாற்றம்...

அதிலிருந்து இறங்கியவரை கூர்ந்து கவனித்தாள். மாடி ஜன்னலின் வழியே தயக்கமின்றி பார்க்க முடிந்தது.



அப்பெரியவரின் நடையும் ஜாடையும் அவர் பாண்டியனின் அப்பாவாக இருக்கக்கூடும் என்றன.

''இவர் பெயரும் பாண்டியனா?''

குடும்பப் பெயரை அவர்கள் அனைவரும் பயன்படுத்தியதால் நேர்ந்த குழப்பம் போலும்.

இந்த பெரிய மனுஷரை நந்தினி விவரம் அறியாமல் விரட்டி அடித்து விட்டால்?

## 19

அவசரமாய் வாசலுக்கு ஓடி வந்தவளை முறுவலோடு பார்த்தவர் கனிவாய் கேட்டார்.

''நீதானேம்மா பவித்ரா?''

''ஆமா... வாங்க... நீங்க?''

வரவேற்பறையின் சோபாவில் அவரை அமரச் செய்தவள் பதிலுக்குக் காத்திருந்தாள். ஆனால் அவர் அவசரமே இன்றி அந்த அறையை சுற்றிலும் நோட்டமிட்ட பின் இவளைப் பார்த்து மறுபடியும் புன்னகைத்தார்.

''நீங்க...?''

''பாண்டியனின் அப்பா.''

''வணக்கம்'' சுரத்தின்றியே வணங்கினாள்.

வயது அறுபதைத் தொட்டிருந்தாலும் முழு ஆரோக்கியத்துடன் இருக்கும் அவருக்கா உடல்நிலை சரியில்லை என்று மகன் பறந்திருக்கிறான்?

''என் பேர் சற்குண பாண்டியன். நண்பர்கள் சற்குணம்ன்னு கூப்பிடுவாங்க.''

அந்தஸ்தாய் வந்திறங்கிய பெரியவரை துரத்தியடிக்க நேராததால் நிம்மதியான நந்தினி அறைக்குள் மெல்லத் தலை நீட்டினாள்.

''வாங்க சார்... காபி சாப்பிடறீங்களா?''

''கொஞ்சம் நேரம் ஆகட்டுமேம்மா.''

பணிவாய் மறுத்தவர் அங்கு பேச்சை வளர்க்காமல் பவித்ராவையே உற்றுப் பார்த்தார்.

''இப்படித்தான் சொல்லிக்காம வந்திடுறதா?'' - உரிமை கலந்த அதட்டல் இவருக்குள் கோபம் கிளர்ந்தது.

''யாரிடம் சொல்லணும்? என் தோழி கமலிதான் என்னை மணாலிக்கு வரவழைத்தது. அவளேதான் என்னை வழியனுப்பியதும்'' - என்றாள் சற்று வெடுக்கென.

''பாண்டியன் உன்னை மணாலியிலேதானே இருக்கச் சொன்னான்? நாலு நாட்களில் திரும்பிடறதாய் சொன்னான் இல்லையா?''

''அவர் என்னிடம் சென்னைக்குப் போறதாய் சொன்னார். ஆனால் போனது பெங்களுருக்கு... தவிர நீங்க மிக சுகவீனமாய் இருப்பதாயும் சொன்னார்'' - என்றாள் குரலில் காரம் தடவி.

''குழம்பியிருக்கம்மா அல்லது உன்னை மற்றவங்க குழப்ப முயற்சி செய்யறாங்களா?''

அவர் புருவங்களையும் தோளையும் ஒரு சேர உயர்த்தியது பாண்டியனைப் போலவே இருந்தது.



''என்னிடம் உண்மையை நேரே சொல்லத் துணிவில்லாமல் எழுதி தந்துட்டாவது போனதில் திருப்திப் பட்டுக்கணும் நான்.''

''என் மகன் போனில் எனக்கு உன்னைப் பத்தி பேசிய போது நான் சென்னையில்தான்மா இருந்தேன். எனக்கு இருந்த நெஞ்செரிச்சலை என் மனைவி பெரிசு படுத்திட்டா... டாக்டர் வந்து சோதிச்சு கடைசியாய் 'ஜெலுசில்' போடச் செய்ததுமே நான் நேராயிட்டேன். என் நெருங்கிய சிநேகிதனும் மகளின் கல்யாணத்திற்கு பெங்களூர் கிளம்பியதால் பாண்டியனும் நேரே அங்கேயே வந்துட்டான் - இதுதான் விஷயம். சரி இப்ப உன் விஷயத்தைச் சொல்லு... அதென்ன கடிதம்? பாண்டியனுக்கு கடிதம் எழுதறப் பழக்கமே கிடையாதே...'' புருவங்களைச் சுருக்கினார்.

''இதோ எடுத்திட்டு வரேன்...''

மேலே போனவள் தன் கைப்பையில் இருந்த அக்கடிதத்தை எடுத்து வந்தாள். அதைத் தொட, பிரிக்க, படிக்கும் போதெல் லாம் தேள் கொட்டுவது போன்ற வரும் வேதனை ஏற்பட்டா லும் கூட, அதையெல்லாம் செய்யாதிருக்க முடியவில்லை.

அடிக்கடி பிரித்துப் பழக்கப்பட்ட அக்கடிதம் சற்று தொய்ந்திருந்தது.

அவள் நீட்டிய இளம் ஊதா நிற உறையை வாங்கியவர், கவனமாய் அதைப் பார்த்து, பின் பிரித்து கடிதத்தில் வேகமாய் விழி ஓட்டினார்.

''இது பாண்டியனின் கையெழுத்து இல்லையேம்மா... அது உனக்குத் தெரியாது. என்றாலும் பெற்ற எனக்குத் தெரியும்லே? அவன் கையெழுத்து சீராய் இருக்கும்.''

இவளுக்கு விக்கியது...!

அந்தத் தகவல் அதிர்ச்சியைத் தந்தாலும் அதன் ஊடே ஆனந்தமும் கலந்திருந்தது.

ஆக... இந்தக் கடிதத்தை எழுதியது பாண்டியன் அல்ல. பின் யாரின் வேலை இது?

''ஆக நீ குழம்பி பிறரையும் குழப்பிட்டம்மா பவித்ரா. உன்னை எல்லாக் குழப்பத்திலிருந்தும் மீட்கும் முயற்சியில் நாங்க இருக்கோம். முதலில் எங்க வக்கீலோடு கலந்து பேச வேண்டியிருக்கிறது.''

இவளுக்குப் புரியவில்லை - இச்சூழலில் வக்கீல் எதற்காக?

தான் இவர்களது சொத்தை அபகரிக்கத் திட்டமிடுவதாய் நினைக்கிறாரா?

''என்னம்மா யோசனை... முகம் வாடிடுச்சு?''

''நான் காசுக்காக... அலையும் பெண் இல்லை...'' - துக்கம் தொண்டை அடைக்கச் சொன்னாள்.

''யார் அப்படிச் சொன்னா? பாண்டியன் லேசுப் பட்டவன் இல்லை பவித்ரா.''

'எவன் தன்னைத் தானே செலவழிக்கிறானோ, அவனே பணக்காரனாகிறான்' என்பது அனுபவ வாக்கு. பாண்டியன் தன்னை வருத்தி, முயற்சித்து மேலும் முன்னேறியவன். அதன் பலன் பணமும் செல்வாக்கும் மட்டுமல்ல... அனுபவமும் தான். ஆக உலகை வாசிக்க தெரிஞ்சுக்கிட்டான். பிற பெண்களைப் போல நீ பண மோகம் கொண்டவள் அல்ல என்பதை புரிஞ்சிருப்பான்.

உன் எளிமையும் இனிமையும்தான் அவனை ஈர்த்ததாம்.



இவளுக்குள் வெட்கம் வந்தாலும் குழப்பம் தீரவில்லை.

''ஆனா உங்க தங்கை மகள் லலிதாவை அவரைக் கல்யாணம் பண்றதாய்...'' அடக்க முடியாமல் சொல்லி விட்டாள்.

''அவசரப்படறேம்மா மற்றவர்களை பேசி முடிக்க விடணும்... பரவாயில்லை - உன் அப்பாவின் குணாதிசயம் உனக்கும் வந்துருக்கும் போல...'' புன்னகையுடனேயே பேசினார்.

''எங்கப்பா.. அவரைப் பற்றி பேச... உங்களுக்கு என்ன தெரியும்?''

''இறந்தவரின் ஆன்மா சாந்தி பெறட்டும். ஆனால் உயிரோடு இருக்கிறவங்க பேசினாதானே நமக்கு விவரம் புரியும்... ஜீவனம்மா போன்ற ஆட்களைப் பற்று சொல்றேன்...''

இவளது விழிகள் விரிந்தன.

''உங்களுக்கு ஜீ பற்றித் தெரியுமா?''

குட்டி பதினாறடி பாய, பெற்றவர் அதற்கும் இரு மடங்கு பாய்ச்சலில் அல்லவா இருக்கிறார்? பாண்டியன் மேலெழுந்த வாரியாக தன் பெயர், படிப்பு பற்றிய விவரங்களை அறிய, இவரோ தன் சரித்திரத்தையே பிட்டு வைப்பார் போலும்!

''உங்கப்பா சாவில் நமக்கு புரியாத விஷயங்கள் இருக்குது பவித்ரா - அவர் நிச்சயம் தற்கொலை செய்யவில்லை. அது ஒரு விதமான கொலை... அவர் வியாபாரத்தில், சமூகத்தின் கண்ணில் தன் ஒழுக்கத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் சாதாரண வேலையைக்கூட செய்ய முடியாதவர்னு குற்றம்

சாட்டப்பட்டு.... அந்த அவமானம் தாங்காமல்... குடிக்கு அடிமைப்பட்டு... இல்லை, படுத்தப்பட்டிருந்தார்."

உலர்ந்த உதடுகளை ஈரமாக்கியவள் மெல்லக் கேட்டாள்.

"இதற்கெல்லாம் காரணம் யார்?"

ஆக இவர்களுக்கு தன் தகப்பனைப் பற்றிய விவரங்கள் எல்லாம் தெரியுமா? தன்னை ரணப்படுத்தும் கேள்விகளுக்கான விடைகூடத் தெரியுமா?

"அதெல்லாம் பாண்டியன் சொல்வான்ம்மா..."

"அவர்...?"

பேச்சை ஆரம்பித்தவளின் வாயடைத்தது.

உயரமாய் அந்த அறைக்குள் நுழைந்தவனையும், அவன் பின்னே பம்மிப் பதுங்கி வந்த மற்றொரு நபரையும் பார்த்து...

## 20

**யா**ரை இனிப் பார்க்கப் போவதில்லை. பார்க்கவும் கூடாது, என்று எண்ணினாளோ அவர்களைப் பார்த்ததும் என்ன செய்வது என்று புரியாத திகைப்பு.

ஆனால் ஓடி வந்து தன்னைக் கட்டி அழுத ஜீவனம்மாவை அவளால் வெறுக்க முடியவில்லை.

உடலும் உள்ளமும் நெகிழ்ந்தன.

"உன்னை விட்டுப் போயிருக்கக் கூடாது மகளே... ஆனால் எதிர்பாராததெல்லாம் நடந்து போச்சே."



ஆறுதலாய் பேசி இயல்பாய் ஜீவனம்மாவிடம் சில கேள்விகளைக் கேட்டு பதில் வாங்கினார் பெரியவர் சற்குணம்.

"ஆக, பவித்ராவுடைய அப்பா குடிக்குப் பழகிட்டார்?"

"ஆமாங்க. தொழில் நசிஞ்சதில் மனசொடிஞ்சவரை, அதுதான் ஒரே மருந்துன்கிற நிலைக்குத் தள்ளிட்டுப் போயிட்டான்... அது தவிர தூக்க மாத்திரைக்கு வேற பழக்கப்படுத்திட்டான். முதலாளிக்கு அது இல்லாமல் தூங்க முடியாதுன்னு ஆகிப் போச்சு."

அதிர்ந்து போனாலும் விவரங்களைப் பதிவு செய்து கொண்டிருந்தது பவித்ராவின் புத்தி.

"ஏற்கனவே முதலாளிக்கு மூட்டு வலி உண்டு. சதா உட்கார்ந்து குடிக்க நிலைமை மோசமாயிடுச்சு. பல மணி நேரம் காரில் உட்கார்ந்து பிரயாணம் பண்ண முடியலை. அப்படியே போனாலும் காரில் இருந்து இறங்குபவரால் நடக்க முடியாது. குன்னிக் குன்னி நடக்க நேரும். அதை எல்லாம் கூட தனக்கு சாதகம் ஆக்கிட்டான் அந்தப் பாவி-

'பவி படிக்கிறது பெரிய மனுஷங்களுக்கான பள்ளி... அங்கு வர்ற பெற்றோர் பந்தாவும் எடுப்புமாய் இருக்க, நீங்க அங்கே இப்படி நொண்டி நொண்டி தன்னைப் பார்க்க வருவதை பவி விரும்பலை' என்று அவன் சொல்ல முதலாளியின் மனசும் ஒடிந்து போனது."

"கடவுளே... அப்படியா, சொன்னான்? ஆனாலும் அப்பா அதை எல்லாம் ஏன் நம்பணும்?"

"காசில்லாதவங்களுக்கு இந்த உலகம் எந்த மதிப்பும் தர்றதில்லையேம்மா. வியாபாரத்தில் நொடிஞ்ச முதலாளி

எந்த அவமானங்களை அலட்சியங்களைப் பார்த்திட்டார்... அதில் வெதும்பியவர் இதையும் நம்பிட்டார்...

நொந்து இறந்தே போன தகப்பனிடம் அவருக்கு பாசமும் பச்சாதாபமும் பொங்கின.

வடிந்த கண்ணீரை அடக்க முடியவில்லை.

தன்னருகே வந்து மவுனமாய் தன், தோளில் கை போட்டு அணைத்த பாண்டியனையும் தடுக்க முடியவில்லை.

"இதெல்லாம் விடவும் கொடுமை நடந்ததும்மா..."

ஜீவனம்மா தயங்கினாள்.

"இன்று எல்லாத்தையும் சொல்லிருங்க. விஷயத்தை முழுக்கத் தெரிஞ்சு, பிறகு நாம் அதை மறந்துடலாம்..." ஊக்கினார் சற்குணம்.

"முதலாளிக்கும் எனக்கும்..." ஐயோ நாக்கூசதுங்களே கூறினாள் - ஜீ.

அதிர்ச்சியில் மற்றவர்களும் பேசவில்லை.

"அவரு சொத்துக்காக நா அவரைக் கல்யாணம் பண்ண திட்டம் போடறதாய் ஒரு வதந்தியைப் பரப்ப... இந்த அதிர்ச்சிய என்னால தாங்கக் கூடலை. இனியும் நாம இங்கிருந்தா எனக்கு மட்டுமல்ல முதலாளியோட நல்ல பேருக்கும் ஆபத்து. அசிங்கம்னு நான் கிளம்பிட்டேன்... சொந்த சகோதரி போல வச்சிருந்தவர்கூட ஒரு வார்த்தை சொல்லலை. பெங்களூரில் ஒரு முதியோர் விடுதியில் எங்க பெரியத்தை இருக்காங்க. அவுங்க பிள்ளைங்க வெளிநாட்டுல இருக்கறதால வசதியான விடுதியாப் பார்த்து விட்டுருந்தாங்க... பழக்கமிருந்ததால் அங்கேயே சமையல் வேலைக்குப் போய் சேர்ந்துட்டேன்..."



"எங்கிட்ட கூட ஒரு வார்த்தை சொல்லலையே, ஜீ?"

வருத்தத்துடன் குறைபட்டாள் பவித்ரா.

"என்ன காரணம்னு சொல்லிட்டுக் கிளம்புவேன் கண்ணு? உங்காதில இந்த அசிங்கமெல்லாம் ஏற வேண்டாம்னுதான் சப்தமில்லாம போயிட்டேன்."

சற்குணம் குறுக்கிட்டார்.

"ஆரம்பத்தில் உன்னைப் பற்றி பாண்டியன் தகவல்கள் திரட்டியது உன்னை மேலும் அறியும் ஆர்வத்தில்தானம்மா... ஆனால் கவலையான செய்திகள் காதில் விழுந்தன. 'தற்கொலை செய்தவரான்னு' சிலர், 'சித்த சுவாதீனமில்லாமல் வீட்டிலே, அடைஞ்சு கிடந்த மந்திர மூர்த்திதானேன்னு' சிலர்... 'பாவம் குடிகாரர்னு' விதவிதமான தகவல்கள்."

முகம் சிவக்க, கவிழ்ந்து கொண்டாள்.

தன் மீது இத்தனைப் பழியிருக்க, பாண்டியன் பொய் சொன்னதாக விவரம் அறியாமல் குற்றம் சாட்டியதை நினைத்துக் குறுகினாள்.

"இது போல ஊர் அபவாதம், கேலி கண்டெல்லாம் அஞ்சக் கூடாதம்மா... நம் மீது உப்பை அள்ளி வீசட்டும்.

ஆனால் நம் மேல் புண்கள் இருந்தால் அன்றி நமக்கேன் எரியணும், நோகணும்?"

அப்பா சொல்ல, பாண்டியன் தொடர்ந்தான்-

"ஆக உண்மை என்ன என்று ஆராய முற்பட்டோம்..."

இவள் இதயம் நன்றியால் ததும்பியது. நாலு பேர் எட்டு விதமாய் பேசியதும்,

'ஐயோ இந்தக் குடும்பம் நமக்குச் சரிப்படாது' என்று கையைத் தட்டி விட்டு எட்டிப் போவோர்கள்தான் இன்று அதிகம்!

காதல் மட்டுமல்ல இவள் மீது இவளது குடும்பத்தின் மீது நம்பிக்கையும் வைத்து 'இப்படி ஒரு அபவாதம் ஏன் கிளம்பியது -

கிளப்பியது யார்' என்பதை ஆராய்ந்து. ஜீவனம்மாவையும் தேடிப் பிடித்து...

தன்னையும் அறியாமல் கை கூப்பினாள்.

இவளது மனமுருச்சி புரிந்த பெரியவர் ஆதுரத்துடன் இவள் தோளைத் தட்டினார்... இருபுறமும் தந்தையும் மகனுமாய் நிற்க, பெரும் பாதுகாப்பை நிம்மதியை உணர்ந்தாள்.

"என்னைத் தேடி பெங்களூர் வந்த பெரியவரு, சின்ன வரையும் அங்கே வரச் சொல்லிட்டார்."

ஜீவனம்மா சொல்ல பவித்ரா பெரியவரை ஏறிட்டாள்.

"ஏதோ நண்பர் வீட்டுக் கல்யாணம்னீங்களே...?"

"பொய்யில்லம்மா... பிஸினஸ் புள்ளிகள் ஒரே கல்லில் மூன்று மாங்காய் கூட அடிப்போம். கல்யாணத்திற்குப் போனேன் - உன் 'ஜீ'யைச் சந்திச்சேன். பாண்டியனையும் வரவழைக்க எங்க வக்கீலோடு உட்கார்ந்து பேசி, அவசர விஷயம் தெளிவாயிடுச்சு."

"மன்னிச்சிடுங்க மாமா... உங்களைக் குற்றப்படுத்தனும்னு கேட்கலை..."

"எல்லாம் கேட்டுத் தெளிஞ்சிடும்மா... முழு நிச்சயம் வந்துட்டா கலவரப்படவே மாட்டேல்ல?"



"உங்கப்பாவை கடை ஆட்கள் ஏமாத்திருக்காங்க... கடனுக்குப் பாகங்களை வாங்கினவர்களிடமிருந்து வசூலிக்கவும் முடியலை... நம்பினவங்க ஏமாற்றிய விரக்தியில் குடிக்க ஆரம்பிச்சிருக்கார்..."

"இல்லீங்க தம்பி... பாட்டிலை வாங்கி வந்து ஊற்றிக் கொடுத்தது அந்தப் பாவி மோகன்தாங்க..."

ஆத்திரமாய் சொன்னாள் ஜீவனம்மா.

"அதோடு தூங்க 'வாலியம்' மாத்திரைகள்... இப்படி அவரை உருக்குலைத்து, உன்னையும் அண்ட விடாமல் செய்து... கடைசியில் அவருடைய ஒழுக்கம், நன்னடத்தையிலும் களங்கம் கற்பித்து அவரை மறைமுகமாய் கொன்றதே... மோகன்தான்..."

இவள் அதிர்ச்சியில் உறைந்திருந்தாள்.

இப்படிப்பட்ட கயவனையா அவள் நம்பி, திருமணம் முடிக்கவும் எண்ணியிருந்தாள்... கடவுளே!

## 21

"நானு அப்படி ஓடிப்போயிருக்கக் கூடாது பாப்பா. அங்கேயே இருந்து உன்னைக் காபந்து பண்ணியிருக்கனும்... ஐயோ முதலாளியோட நம்மைச் சம்பந்தப்படுத்திப் பேச, பாப்பா என்னதான் நினைக்காது. அதும் முகத்தை எப்படிப் பார்க்கன்னு... நாங் கூசி ஓடிட, அந்தப் பயலுக்குக் கொண்டாட்டமாப் போச்சு."

மூக்கைச் சிந்தினாள் ஜீ.

இதை ஜாடை மாடையாய் தன்னிடம் தெரிவித்து மோகன் ஏற்கெனவே தன்னை நிலை குலையப் பண்ணியிருந்தானே!

"இனி ஜபாக்கு இருக்குது திண்டாட்டம்! உங்கப்பாவின் வியாபாரத்தில் தன்னையும் பாகஸ்தராய் தன்னை இணைத்துக் கொண்டவன் வங்கிக் கணக்கில் பணம் குவிஞ்சிருக்குது... கடந்த ஐந்து வருஷங்களில் நிறைய சொத்தும் வாங்கிட்டான்... ஒரே வியாபாரத்தில் பங்குஸ்தராய் இருப்பவரில் ஒருவர் நொடித்தும் அடுத்தவர் செழித்தும் இருக்க முடியுமா..?"

"இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரிய வந்தது?"

"வங்கி நிர்வாகிகள், வக்கீல், ஆடிட்டர், வாங்கி விற்கும் தரகர்கள் எல்லாம் நமக்குத் தெரிஞ்சவங்க மூலமாய் விவரம் சேகரித்தேன். உங்கப்பாவின் மேல் அவர்களுக்கிருந்த அபிமானமும் சேர துப்பறிய உதவியாய் இருந்தது... கேள்விப்பட்டதை நாலு நாள் பேசிட்டு ஜனங்க மறந்திடுவாங்க பவி... ஆனா அதை விடாமல் நாம் தூண்டித் துருவ..."

"ச்சே... எங்கப்பாவை இப்படி பாடாய்படுத்திக் கொன்றவனை..."

"விட மாட்டோம் பவி... உங்கப்பா தொழிலில் 'கை வைத்தவன் மகளையும் அடிச்சடலாம்னு நினைச்சதை... என்னால் மன்னிக்கவே முடியாது..."

"அப்படின்னா இத்தனை ஆண்டுகள் பிரம்மசாரியாய்?"

"அவனுக்கு பல பெண்களோடு தொடர்புண்டுன்னு கேள்வி. அதை ரொம்ப விலாவாரியாய் துருவ வேண்டாம்னு விட்டுட்டோம்... உன்னுடைய பெரிய வீடு, உன் பேரிலுள்ள ஷேர்கள், தோப்புகள்... இதெல்லாத்தையும் தான்



அடையணும்னா ஒரே வழி உன் புருஷனாகிறதுதான்... கவனமாய் போட்ட திட்டம்தான். ஆனால் பாண்டியன் உன் வாழ்வில் நுழைய, அத்தனையும் ஆட்டங் கண்டிருக்க. பல வருஷங்களாய் அவன் போட்ட திட்டத்தைக் கவிழ்க்க, ஆண்டவனுக்குப் பத்தே நாள் போதுமாயிருந்தது! அவர் பார்த்துப்பார் பழிவாங்கறதை..."

"அதுக்காக இப்படி ஒரு கிரிமினலை நாம் சும்மா விட்டுடறதாப்பா? பவிக்கு எழுதிய இந்த ஒரு கடிதமே அவனை ஜெயிலுக்கு அனுப்பப் போதும்... ஹூம்... இதில் பாண்டியன்னு என் கையெழுத்து வேற... விடக் கூடாதுப்பா..."

"பவித்ராவின் பேரும் கூடவே கிடந்து அல்லாடும் - பரவாயில்லையா... பொறுப்பா..."

ஆத்திரத்துடன் தன் தோளில் அழுந்தின பாண்டியனது கைகளை இவளும் பற்றிக் கொண்டாள்.

"எப்படிப் பவி நினைச்ச... நான் இப்படி ஒரு கடிதம் எழுதுவேன்னு..." நம்பிக்கைதான் காதலின் ஜீவன் என்பது இப்போது முழுக்கப் புரிய, மனமார சொன்னாள் -

"மன்னிச்சிடுங்க பாண்டியன்."

"அனுபவமுள்ள பெரியவரையே ஆட்டின அந்த மோகனுக்கு இந்தச் சின்னப் பெண் எம்மாத்திரம்டா? சும்மா எம்மருமகளை மிரட்டாதே..."

கண்டித்தார் பெரியவர்.

"அதே ஜாதா நிற உறை மாமா... அதான் சறுக்கிட்டேன்... லலிதாவின் பிறந்த நாளின் போது வந்த முதல் உறை

வீட்டில் கிடந்திருக்கும்... அதையே குயுக்தியாய் பயன்படுத்திகிட்டான். தவிர எனக்கு இவரின் கையெழுத்துத் தெரியாதே..."

"இதிலேயும் எனக்கு ஒரு நிம்மதி, பவி..." முறுவலித்தான் பாண்டியன்.

"என்ன?"

"உனக்கு மோகன் இதுவரை காதல் கடிதாசி எழுதலைங்கறதுதான் - ஏன்னா உனக்கு அவனுடைய கையெழுத்தும்தான் தெரியலை."

"ம்ம்... பள்ளிக்கு சில கடிதங்களை அனுப்பியதுண்டு... அதெல்லாம் கம்ப்யூட்டர் மூலம் எழுதியவை. எத்தனை வருஷங்களாய் இப்படி ஒரு வஞ்சக எண்ணத்துடன் பேசிப் பழகி... ஐயோ."

"நாங்களும் இதை ஒத்த வியாபாரத்தில் இருப்பதால் அந்த ராஸ்கலின் வியாபாரத்தை ஒரே மாசத்துல படுக்க வைத்திடலாம்மா... இவனது கள்ளத்தனம் புரிஞ்சால் மற்ற வியாபாரிங்க ஒதுங்கிடுவாங்க... கப்பல்ல எங்கே ஓட்டை விழுந்திருக்குன்னு அந்தப் பயல் கண்டு பிடிப்பதற்குள் அவனுடைய கப்பலே மூழ்கியிருக்கும்..."

கடுகடுத்தார் சற்குணம்.

"ஆக இனி என்னிடம்...?"

"வாயிருந்தாத்தானே ஆட்ட? இப்பமே பயலுக்கு தன் குட்டெல்லாம் அம்பலமாயிடுச்சன்னு அவனது மானேஜர் மூலம் தகவல் போயிருக்கும். வெலவெலத்திருப்பான். இனி கம்பி எண்ண வேண்டியதுதான் பாக்கி."



"இனியேனும் நீ நிம்மதியும் சந்தோஷமாயும் இருக்கணும் மகளே..." நெட்டி முறித்த ஜீயின் வரண்ட கைகளைப் பற்றிக் கொண்டாள்.

"நீயும் எங்ககூடவே இருப்பியா ஜீ? என்ன மாமா?"

ஜீ மறுத்தாள் - "ஓடின இந்த கோழைக்குத் தண்டனை தாம்மா தரணும்."

"காலத்துக்கும் தனக்கே தொண்டூழியம் பார்த்துக் கிடக்கச் சொல்றா - உன் சின்ன எஜமானி - அதுதாம்மா தண்டனை."

சிரித்த சற்குணம்,

"சரி நாம வெளியில் நிற்போம் - அம்மா பவித்ரா, பாண்டியன் உன்னிடம் ஏதோ தரணும்னு சொன்னான்... நாங்க காத்திருக்கோம் - பத்து நிமிஷத்தில் வந்துடறீங்களா?" வெளியே நடந்தார்.

"என்னத் தரப் போறீங்க?" கிசுகிசுத்தாள்.

"என்னையேதான் - வா."

அவளது சிறு அறையின் கதவைச் சாத்தியவன் இவளையே நிதானமாய் பார்த்தான்...

"என்ன?" தடுமாறினாள்.

"என்னை முழுக்க நம்பலையே நீ பவி... அதான்..." போலி மிரட்டல்தான்.

"விதை விழுந்ததுமே இப்படி விருட்சமாகுமான்ர பிரமிப்பு! எனக்கு இன்னுமே நம்பத்தான் முடியலை பாண்டியன்... நம்ப முடியாத அளவு நிம்மதி... சந்தோஷம்... காதல் எல்லாம்... இதெல்லாம் கமலிட்ட சொல்லணும்... கேட்டா ரொம்ப சந்தோஷப்படுவா... அங்கே மோகன்..."

"அவனை அங்கிருந்து கிளப்பிப்போக... உன் சிநேகிதிக்கு ஓரளவு விவரமும் சொல்லிட்டேன்."

ஏற்கெனவே மிகச் சின்ன அறை... அதில் ஒட்டி நின்றவனை அவஸ்தையாய்ப் பார்த்தாள்... வெட்க அவஸ்தை... அதில் மோகமும் இல்லாமல் இல்லை...

"இப்ப... நாம உங்க அம்மாவப் பார்க்கனும் இல்ல?"

"ம்ம்... பார்க்கலாம்.. பார்க்கலாம்... அதற்கு முன் உனக்குக் கொஞ்சம் ஒப்பனைத் தேவை பனி... பளபளன்னு உன் முகம் ஜொலிப்பதில் எங்கம்மா மயங்கிடனும்... ஆரம்பிக்கவா?" என்றவன் குனிந்து தன் உதடுகளால் அவள் முகத்தை ஒற்றலானான்!